விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=



# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 24
ஒலி 062 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை (19.02.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## தலைவர் பிரபாகரன் இறந்துவிட்டதாகக் கூறி இலங்கை - இந்திய அரசுகள் நாடகமாடுகின்றன

### பழ.நெடுமாறன் தெரிவிப்பு



(சென்னை)
பிரபாகரன் இறந்துவிட்டதாகக் கூறி இலங்கை - இந்திய அரசுகள் நாடகமாடுகின்றன என உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர் காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில், இந்தியாவில் உள்ள தடயவியல் அறிஞர்களில் மிக முக்கியமானவர்

19

### மின்சாரம், எரிபொருள், மருத்துவம்

## அத்தியாவசிய சேவைகளாக்கி வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)
மக்களின் வழமையான இடையூறற்ற வாழ்வுக்கான 3 சேவைகளை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய மின்சாரம் வழங்கல் தொடர்பான சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் வழங்கல் மற்றும் விநியோகம், வைத்தியசாலை சேவைகள் ஆகியமூன்றுமே

19

## வவுனியாவில் விபத்து; சிறுமி உயிரிழப்பு

(குருமன்காடு)
வவுனியா ஏ9 வீதி பூனாவ பகுதியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் சிறுமி ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் படுகாயமடைந்துள்ளதாக பூனாவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்தில் அப் பகுதியைச் சேர்ந்த 13 வயது சிறுமி ஒருவர் மரண

19

# திட்டமிடப்பட்ட திகதியில் தேர்தலை நடத்த முடியாது

### உயர் நீதிமன்றுக்கு அறிவிக்கவுள்ளது தேர்தல்கள் ஆணைக்குழு



(கொழும்பு)
உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதி, நிதி அமைச்சினால் விடுக்கப்படாமை உள்ளிட்ட தேர்தலை நடத்துவதில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பில் எதிர்வரும் தினங்களில் உயர் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அத்தோடு அரச அச்சகத்தினால் வாக்குச்சீட்டுக்களை அச்சிடும் பணிகள் தாமதப்படுத்தப்பட்டுள்ளமை, பெற்றோலியக் கூட்டுத்

19

### பல லட்சம் பக்தர்களுடன்

## திருக்கேதீஸ்வர மஹா சிவராத்திரி



19

## உறுப்பினர்களின் எண்ணிக்கையை குறைத்து தேர்தலை நடத்த ஒன்றிணைவோம்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)
பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை முன்னெடுக்கவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைத்து தேர்தலை நடத்த ஒன்றிணையுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உள்ள அனைத்துத் தரப்புகளும் ஒன்றிணை

19

## சீனாவின் உத்தரவாதம் இல்லாமல் இலங்கைக்கு உதவி

### ஆராய்கிறது ஐ.எம்.எப்

(வோஷிங்டன்)
சீனாவின் கடன் மறுசீரமைப்பு குறித்த உத்தரவாதம் இல்லாமல்இலங்கைக்கு கடனுதவியை வழங்குவது குறித்து சர்வதேச நாணய நிதியம் பரிசீலித்து வருகின்றது.

சீனாவின் முறையான உத்தரவாதம் கிடைக்காவிடினும் இலங்கைக்கான கடனை அங்கீகரிக்க சர்வதேச நாணய நிதியம் அதன் கொள்கையைப் பயன்படுத்தலாம்.

முன்னதாக இலங்

19

## தேர்தலை ஒரு வருடம் ஒத்திவைப்பது சிறந்தது

### விக்னேஸ்வரன் எம்.பி

(யாழ்ப்பாணம்)
உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒரு வருடம் ஒத்திவைப்பது சிறந்தது என தான் கருதுவதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று சனிக்கிழமை வலி. வடக்கு பிரதேச சபை உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு ஊடகங்

19

### பயங்கரவாத தடைச்சட்டத்தால்

## இலங்கை ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை இழக்கும்

### ஜேர்மனியத் தூதுவர்

(கொழும்பு)
பயங்கரவாதத் தடைச் சட்டம் காரணமாக இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச்சலுகையை இழக்கும் அபாயம் இருப்பதாக இலங்கைக்கான ஜேர்மனியின் தூதுவர் தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்ப மாற்றுவோம் என இலங்கை பல

19

## சாவகச்சேரியில் முதியவர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்வயல் பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு தூக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கல்வயல் பகுதி

19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொர்க்கம் திருமண சேவை (கனடா)

Uk இல் வசிக்கும் பூரம் நட்சத்திரம் சிம்ம ராசி 1976 இல் பிறந்த விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு இலங்கையில் பொருத்தமான மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடர்புகளுக்கு:
001 416 666 1855(Canda)
077 650 5097
077 200 0230
(14650)

## சொர்க்கம் திருமண சேவை (கனடா)

திருகோணமலையில் வசிக்கும் வசதியுள்ள 41 வயதுடைய உத்தரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்த மணமகனுக்கு உள்ளூரில் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
001 416 666 1855 (Canda)
077 650 5097
077 200 0230
(14650)

## வவுனியாவில் காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒரு பரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக் காணிகள் விற்பனைக்குள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு :
077 656 3582
(14645)

## சொர்க்கம் திருமண சேவை (கனடா)

லண்டனில் வசிக்கும் 30 வயதுடைய (Engineer) செவ்வாய் குற்றமுள்ள மணமகனுக்கு இலங்கையில் படித்த மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
001 416 666 1855 (Canda)
077 650 5097
077 200 0230
(14650)


# டெங்கு தொற்று இளைஞன் உயிரிழப்பு

(ஏறாவூர்)

மட்டக்களப்பு ஏறாவூரில் டெங்கு நோய்க்கு இலக்காகி 22 வயது இளைஞன் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு சுகாதார பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் குணசிங்கம் சுகுணன் தெரிவித்தார்.

ஏறாவூர் ஐயங்கேணி பாரதி கிராமத்தைச் சோர்ந்த 22 வயதுடைய பகிரதன் தனுஷ்கரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞன் டெங்கு நோய் தாக்கத்துக்கு உள்ளாகி செங்கலடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கடந்த 16ஆம் திகதி மட்டு போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி இவ்வாறு உயிரிழந்துள்ளார். (4)


## சிங்களம் கற்போம்

அனைவருக்குமான சிங்கள வகுப்பு நடைபெறவுள்ளது.

அரச அரசசார்பற்ற உத்தியோகத்தர்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் சாதாரணதர பரீட்சை எழுத இருக்கும் அனைவருக்கும்.

இலகுவாக, விரைவாக மற்றும் பரீட்சகர்களில் சித்தி பெறுவதற்கான வழிகாட்டல்களுடன் மிக அனுபவம் கொண்ட ஆசிரியரினால் கற்பிக்கப்படுகின்றது.

உடன் தொடர்பு கொள்ளவும்
077 695 4530
(14653)

## கண்ணீர்க் காணிக்கை




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் கணிதத்துறை பேராசிரியருமான

### அமரர் திரு இரட்ணம் விக்னேஸ்வரன்

அவர்கள் கணித வளவாளராக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளப்பெரும் பணியாற்றினார். அன்னாரின் மறைவானது தமிழ் சமூகத்தின் கணிதத்துறைக்கு பாரிய இழப்பாகும் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருடன் துயர் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

(14656)

தேசிய வெளிக்கள நிலையம்
தொண்டைமானாறு,
இல. 133, செம்மணி வீதி நல்லூர்

## சொர்க்கம் திருமண சேவை (கனடா)

கனடாவில் வசிக்கும் 43 வயதுடைய கத்தோலிக்க மணமகனுக்கு யாழ்ப்பாணத்தில் மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
001 416 666 1855 (Canda)
077 650 5097
077 200 0230
(14650)

## வேலையாட்கள் தேவை

யாழ். நகரில் உள்ள ஐஸ் கிறீம் உற்பத்தி நிலையத்திற்கு பெண் பிள்ளைகள் வேலைக்கு தேவை.

077 777 0916
(14646)

## தேவை

பரந்தனில் இயங்கிவரும் களஞ்சியசாலை ஒன்றிற்கு முகாமைத்துவ உதவியாளர் தேவை.

TATA Bata ரக வாகனம் மாத வாடகைக்கு தேவை. தொடர்புகளுக்கு :
077 245 4224
077 711 0329
(14649)

## வீடு வாடகைக்கு

யாழ் இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. (14651)

074 131 5639

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் சின்னத்தம்பி விஸ்வநாதன்

(வலி கிழக்கு பிரதேசசபை ஓய்வூதியர், சமாதான நீதவான்)

திதி : அமாவாசை (20.02.2023)

காலம் ஒன்று கடந்தாலும்
உம் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது
விண்ணுலகு சென்றாலும்
மண்ணுலகு உம்மை என்றும் மறக்காது




எங்கள் அன்புத் தெய்வம் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுதின வீட்டுக்கிருத்தியம் 20.02.2023 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பானுஷா ரான்ஸ்போட்,
வல்வெட்டி வேவில் றோட், வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்
077 521 2442


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**T P Hunt ஞாபகார்த்த ஓவியக்கூடம்**



உயர்தரப் பரீட்சை நிறைவடைந்து விட்டதா?
மாணவர்களே!
உங்கள் கலைத்திறனை வளர்க்க ஓர் அரிய சந்தர்ப்பம்.

வகுப்புக்கள் : ஓவியம்/ சிற்பம்
இடம் : T P Hunt ஓவியக் கலைக்கூடம், 27 தேவாலய ஒழுங்கை, சாவகச்சேரி.

* முன்பள்ளி - தரம் 5 வரை
 தரம் 6-தரம் 10 வரை
 க.பொ.த. உயர்தரம் - ஓவியம் /சிற்பம் கலையை விரும்புபவர்கள்
* அத்தோடு ஊடக உபகரணங்கள் தரமானதும் குறைந்த விலையிலும் விற்பனைக்கு உண்டு.
* மாணவர்களுக்கு ஓவிய வகுப்புகளுக்குரிய உபகரணங்கள் வழங்கப்படும்.

(C-6002)

தொடர்புகளுக்கு-
முகவரி : T P Hunt Art Gallery
27 தேவாலய வீதி,
சாவகச்சேரி.

தொலைபேசி
074 313 6077
மின்னஞ்சல்
huntartgallery18@gmail.com

பயிர்களை அழிக்கும்

# 6 விலங்கு இனங்களை கொல்ல அரசு அனுமதி

## -விவசாய அமைச்சு-

(கொழும்பு)

**பயிர்களை அழிக்கும் குரங்குகள் உட்பட 6 விலங்கினங்களை கொல்ல விவசாயிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது என விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.**



நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை உருளைக்கிழங்கு விவசாயிகளுடனான சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குரங்குகள் உருளைக்கிழங்குகள் உட்பட பல பயிர்களை நாசம் செய்வது குறித்து அமைச்சரிடம் தெரிவிக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், பயிர்களை அழிக்கும் ஆறு விலங்கு இனங்களான மயில்கள், குரங்குகள், டோக் மக்காக்கள், கிரிஸ்ல்ட் ராட்சத அணில் கள், முள்ளம்பன்றிகள் மற்றும் காட்டுப் பன்றிகள் ஆகியவை சமீபத்தில் பாது காக்கப்பட்ட விலங்குகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டன.

எனவே, அச்சுறுத்தலைச் சமாளிப்பதற்கு எந்தவொரு நடவடிக்கையையும் பயன்படுத்த விவசாயிகளுக்கு சுதந்திரம் இருப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அதிகபடியான ஆய்வுகளை மேற்கொண்ட பிறகு, சிக்கலைத் தீர்க்க வேறு வழிகள் இல்லை என்பதால் இது நிரூபிக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (4)

PFIRC **பிரசாந்த்** குழந்தையின்மை சிகிச்சை மற்றும் ஆராய்ச்சி மையம்
No.77, Harrington Road, Chetpet, Chennai - 600 031, Tamilnadu, India.




medicare
இலவச மருத்துவக் கண்காட்சி!
3rd, 4th, 5th MARCH 2023
கொழும்பு BMICH
Stall No.
B1, B2, B3, B4

பிரசாந்த் மருத்துவமனையின் தலைமை மருத்துவரை நேரில் சந்தித்து உங்களது குழந்தையின்மைப் பிரச்சினைகள் பற்றிய இலவச ஆலோசனைகளைப் பெறலாம்

35 years MEDICARE FOR WOMEN

25 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கைத் தம்பதியரின் குழந்தைக் கனவுகளை நனவாக்கி வரும் மருத்துவமனை

விபரங்களுக்கு: 0760155883

**பிரசாந்த்**
மருத்துவமனை தகவல் மையம்
ரோயல் மருத்துவமனை
62, W.A. சில்வா மாவத்தை,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
infopfrcsl@gmail.com www.pfrcivf.lk

(C-1934)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு குழந்தையின்மைக்கான அதிநவீன சிகிச்சைகளுக்கு மாபெரும் சிறப்புச் சலுகைகள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## தேவராசா தேவமயூரன்

(மதுவரிக் கோப்ரல், மதுவரித் திணைக்களம் - யாழ்ப்பாணம்)

பிறப்பு 12 . 04 . 1975



இறப்பு 17 . 02 . 2023

யாழ்ப்பாணம் அரியாலை கலைமகள் வீதியைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. வேதராசா தேவ மயூரன் அவர்கள் 17.02.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் தேவராசா (ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர்). - மாலினி தேவி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராசரத்தினம் (கட்டட ஒப்பந்தகாரர் - குணமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், தயாவதியின் அன்புக் கணவரும், கஜபூசணி (யாழ்.பல்கலைக்கழக புதுமுக மாணவி), அஜஆரணி (யா/இந்து மகளிர் கல்லூரி), லகுஞ்சரன் (யா/கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தேவசெந்தூரன் (பொறுப்பதிகாரி வேலணை பிரதேச சபை உப அலுவலகம் நயினாதீவு), தேவமகிழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், தொழில்துறை திணைக்களம், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்), தேவமைதிலி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நல்லூர்), தேவமௌலீசன் (முகா மைத்துவ சேவை உத்தியோகத்தர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சசிகலா (ஆசிரியை, யாழ்.மானிப்பாய் இந்துக்கல்லூரி), நிர்மலா (ஆசிரியை யாழ்.கொக்குவில் விக்னேஸ்வரா வித்தியாலயம்), தயாபரன் (போலந்து), கதீஸ்வரன் (கட்டட ஒப்பந்தகாரர்), சோதரன் (தாதிய உத்தியோகத்தர் தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலை), சுதர்சினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## வீரகத்தி கணேசலிங்கம்



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் வீரகத்தி கணேசலிங்கம் அவர்கள் 11.02.2023 சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி - கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்ற தில்லையம்பலம் - மற்றும் இராஜேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வசந்தியின் பாசமிகு கணவரும், வினோஜினி, தனேஷன், சியாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், சிந்துஜா, திலிப்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சக்தியேஸ்வரி (ஜேர்மனி), கருணலிங்கம் (ஓய்வு நிலை அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை), குகனேஸ்வரி (நயினாதீவு), சண்முகலிங்கம் (சுவிஸ்), புஸ்பராணி (நெதர்லாந்து), கலைச்செல்வி (பிரான்ஸ்), கேதாரகௌரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அஷ்வின், அஞ்யனா, திவிஷா, சிராஷ், செலேஷா ஆகியோரின் பசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றையதினம் அன்னாரின் 8ஆம் வட்டாரம், நயினாதீவிலுள்ள அவரது இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் ஆத்மா சாந்திப்பிரார்த்தனை நிகழ்வும் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீரதாயகம், நயினாதீவு - 8. 077 045 4924 077 127 1809 குடும்பத்தினர்

(14658)

### ஒரு அணிக்கு எதிராக அதிக விக்கெட்

# கபில் தேவ் சாதனையை முறியடித்த அஸ்வின்






இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 2 ஆவது டெஸ்ட்போட்டி தலைநகர் டில்லியில் உள்ள அருண் ஜெட்லி ஸ்டேடியத்தில் நடைபெறுகிறது.

இதில் டாஸ் வென்ற ஆவுஸ்திரேலிய அணி பட்டிங் செய்தது. முதல் விக்கெட்டுக்கு 50 ஓட்டங்கள் சேர்த்த அந்த அணி சீரான இடைவெளியில் முக்கிய விக்கெட்டுகளை இழந்து திணறியது.

முக்கியமாக அஸ்வின் பந்து வீச்சில் ஒரே ஓவரில் இரண்டு விக்கெட்டுகளை அவுஸ்திரேலிய அணி பறிகொடுத்தது. இந்தப் போட்டியில் தமிழக வீரர் அஸ் வின் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதன் மூலம் ஒரு அணிக்கு எதிராக அதிக விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் இந்திய அணியின் முன்னாள் வீரர் கபில் தேவ்வை பின் னுக்குத் தள்ளி 2 ஆவது இடத்தை அஸ்வின் பிடித்தார். அவுஸ்திரேலிய அணிக்கு எதிராக அஸ்வின் 100 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார்.

முதல் இடத்தில் அணில் கும்ளே உள்ளார். இவர் அவுஸ்திரேலியா அணிக்கு எதிராக 111 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். கபில்தேவ் பாகிஸ்தானுக்கு எதிராக 99 விக்கெட்டுகளை கைப்பற்றியுள்ளார். (4)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



(C-6005)

எமது கல்லூரி ஆசிரியை திருமதி **கஜீவா பரணீதரன்** அவர்களின் அன்பு மாமியார்

## அமரர் திருமதி ரஞ்சிதம் சோமசுந்தரம்

20.01.2023 அன்று அமரத்துவமடைந்தார் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை**

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் விஞ்ஞான பீட முன்னாள் பீடாதிபதியும் கணித புள்ளிவிபரவியற்துறை முன்னாள் தலைவரும் பேராசிரியருமான



## அமரர் இரட்ணம் விக்னேஸ்வரன்

அவர்கள் 17.02.2023 இறைபதம் அடைந்ததையிட்டு அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

உங்கள் பிரிவால் துயருறும்
ஊழியர்கள் கணித புள்ளிவிபரவியற்துறை
விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(14657)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்து 7 நாட்களேயான சிசுவை கொன்ற தாய்

(கொழும்பு)

களுத்துறை. பயாகல பிரதேசத்தில் பிறந்து ஏழு நாட்களே ஆன சிசுவை தரையில் அடித்துக் கொன்ற தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

28 வயதுடைய சந்தேகநபரான தாய் தொடர்பில் கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றின் அடிப்படையில் நேற்று முன்தினம் அவர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.


கடந்த 9 ஆம் திகதி நாகொட போதனா மருத்துவமனையில் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் இளைய மகளே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

பிள்ளைகளுக்குப் பெயர் சூட்டுவதற்காக பெற்றோர் இருவரும் கடந்த 15 ஆம் திகதி ஜோதிடர் ஒருவரைச் சந்தித்து வீடு திரும்பிய நிலையில் இந்தக் கொலை இடம்பெற்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அன்றைய தினம் பிற்பகல் சிசு படுக்கையில் இருந்து விழுந்து விட்டதாக களுத்துறை போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது.

எனினும் சிசு உயிரிழந்த நிலையிலேயே காணப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனையில் சிசு படுகொலை செய்யப்பட்டமை தெரியவந்ததை அடுத்து சிசுவின் தாயை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். (4)

# 31ம் நாள் நினைவு அஞ்சலி

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 14 - 06 - 1939 |  | 20 - 01 - 2023 |

ஸ்ரீமான்.சிவசம்பு வன்னியசேகரம்

இன்சொல்லும் கீர்த்தியும்
தன்னிகரில்லா தயைவும்
எண்ணிய கருமம் யாவும்
இயல்புற நிறைவு செய்து
என்றும் எம் இதயங்களில்
நிறைமதி போல வாழும்
தங்களின் ஆத்மா சாந்தி
நிலைபெற அஞ்சலி செய்கின்றோம்.

(14642)

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

தகவல்- மனைவியும் குடும்பத்தாரும்
த.நந்தகுமாரன் (மைத்துனர்)

# காலநிலை மாற்ற சவால்களை எதிர்கொள்ள பசுமை நிதிக்குழு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டில் பசுமை நிதி திட்டங்களுக்கு நிதி திரட்ட, ஒரு வலுவான திட்ட வரைபடத்தை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவான் விஜேவர்தன தலைமையில். பசுமை நிதிக் குழுவொன்றை நியமிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

ருவான் விஜேவர்தன தலைமையில் நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் இதற்கான ஆரம்பக்கட்ட கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

காலநிலை மாற்றத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளவும் குறைந்த கார்பன் பொருளாதாரத்தை நோக்கி நகரவும் நிதி ஆதாரங்களை திரட்டுவதற்கும் பசுமை நிதிக் குழு பணியாற்றவுள்ளது.

பசுமை நிதியத்தின் திட்ட வரைபடம், Green Finance, Green Bonds, Climate Finance போன்ற தற்போதைய செயல்முறைகள் அடங்கிய ஒரு தெளிவான நோக்கம், செயற்பாடு மற்றும் இலக்குகளுடன் ஒரே தளத்தில் ஒன்றிணைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பில் குறித்த கூட்டத்தில் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் சாந்தனி விஜேவர்தன, மேலதிக செயலாளர் வெர்னன் பெரேரா உள்ளிட்ட பலர் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர். (4)

# 700 அடி பள்ளத்தில் கவிழ்ந்து முச்சக்கரவண்டி விபத்து

## இருவர் பலி, இருவர் படுகாயம்

(கொழும்பு)

முச்சக்கரவண்டியொன்று 700 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்திற்குள்ளானதில் இருவர் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

தெனியாய - இறக்குவானை பிரதான வீதியின் ஜம்புகஸ்வெட்டிய பகுதியில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் காயமடைந்த நிலையில் சிகிச்சைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது 62 வயதுடைய ஆண் ஒருவரும் 61 வயதுடைய பெண் ஒருவருமே உயிரிழந்துள்ளனர். விபத்திற்கு முச்சக்கரவண்டி சாரதியின் கவனக் குறைவே காரணம் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர். விபத்துச் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4)

# இராசிபலன்

19.02.2023
மாசி 07, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தசி பிற்பகல் 4.07 மணிவரை
திருவேணம் பிற்பகல் 2.29 மணிவரை

சுபநேரம் -9.32-11.02 மணிவரை
இராகுகாலம் 5.02-6.32 மணிவரை

சந்திராஷ்டமம் - புனர்பூசம்,பூசம்

வளவன்




புதிய முயற்சிகளில் முன்னேற்றம் காண்பீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.




நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




பக்குவமாகப் பேசி காரியம் சாதித்துக் கொள்வீர்கள், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் மேலோங்கும் நாள், பயணங்கள் கைகூடும்.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும்.




மறைமுக எதிர்ப்புகள் மாறும், சிக்கனத்தைக் கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்,காரிய அனுகூலமுண்டு, தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பணவரவால் சந்தோசமடைவீர்கள்.




எந்தக் காரியத்தையும் செய்து முடிப்பதில் கூடிய அக்கறை காட்ட வேண்டிய நாள், வரவைக் காட்டிலும் விரயங்கள் மேலோங்கும்,வழிபாட்டால் அமைதிகாண வேண்டிய நாள்.




மன நிறைவு கூடும் நாள்,நீண்ட நாட்களாக தள்ளிப் போட்ட காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, இரவு பகல் [illegible]வீர்கள், ஆன்மிகச் சிந்தனை மேலோங்கும் நாள்.




அரைகுறையாக இருந்த பணியை மீதியும் தொடர்வீர்கள்,விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தெய்வீகச் சிந்தை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு.

அன்பு ஒருநாளும் சந்தைக்கு வருவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் நடத் தப்படும் பொறியியல்மாணி (Bachelor of Technology Honours in Engineering) கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட் டுள்ளன.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் 18 வயதிற்கு மேற்பட்ட வராக இருப்பதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் இணை ந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண டும். விண்ணப்பப்படிவங் களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 22.02.2023 வரை விண் ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரி யூடாவும் மற்றும் 021 222 3374 என்ற தொலைபேசி யூடாவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

---

இலங்கை திறந்த பல்கலை க்கழகத்தினால் நடத்தப்படும் முதுகல்விமாணி (Master of Education) கற்கைநெறிக் கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. இக்கற்கை நெறி க்கு விண்ணப்பிக்க விரும்பு வோர் கல்விமாணி (Bachelor of Education - B.Ed) அல்லது பட்ட மேற்கல்வி டிப் ளோமா (Postgraduate Diploma in Education - PGDE) அல்லது விசேட தேவைகள் சார் பட்ட மேற் கல்வி டிப்ளோமா (Postgraduate Diploma in Special Needs Education - PGDSNE) இல் சித்தியடைந்திருத் தல் வேண்டும். விண்ணப்ப ப்படிவங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 14.03.2023 வரை விண் ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையும், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முக வரியூடாகவும் மற்றும் 021 222 3374 என்ற தொலை பேசியூடாகவும் தொடர்பு கொண்டு விண்ணப்பிக்க முடி யும் என யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

---

இலங்கை திறந்த பல் கலைக்கழகத்தினால் நட த்தப்படும் விஞ்ஞானமாணி (Bachelor of Natural Sciences) கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டு ள்ளன.

இக் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் 18 வயதிற்கு மேற்பட்டவராக இருப்பதுடன் க.பொ.த. (உ/த) பரீட்சையில் கணிதம் மற்றும் உயிரியலில் மூன்று பாடங் களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பப் படி வங்களை www.ou.ac.lk என்னும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து, 08.03.2023 வரை விண் ணப்பிக்க முடியும். மேலதிக விபரங்களிற்கு யாழ்ப்பாணம் பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரியூடாவும் மற்றும் 021 222 3374 என்ற தொலை பேசியூடாவும் தொடர்புகொண்டு விண்ணப்பிக்க முடியும் என யாழ்ப்பாணம் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

---

இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையானது 2023 ஆம் ஆண்டு முதலாம் அரை யாண்டிற்கான முழுநேர கற்கைநெறிகளை ஏப்ரல் 3 திகதி கைதடி தொழிற்பயிற்சி நிலையம், கரைநகர் தொழிற் பயிற்சி நிலையம் , பண்டத்தரி ப்பு தொழிற்பயிற்சி நிலையம் ஆகிய பயிற்சி நிலையங்களில் ஆரம்பிக்கவுள்ளது.

காய்ச்சி இணைப் பவர் (Welder), தொழிற் சாலை மின்னிணைப்பாளர் (Industrial Electrician), மரவேலை தொழில்நுட்பவிய லாளர் (Wood Crafsman), வளிசீராக்கி குளிர்சாதன திரு த்துநர் (A/C Mechanic) மற்றும் அழகுக்கலை (Beautician) போன்ற கற்கை நெறிக்கு விண்ணப்பம் கோரப் பட்டுள்ளது. இக்கற்கைநெறி அனைத்தும் தேசிய தொழில் தகைமை (NVQ) சான்றுத முக்கான பயிற்சிநெறிகளாகும். கற்க விரும்புவோர் தங்கள் பதிவுகளை எதிர் வரும் 15.03.2023 இற்கு முன்னர் மாவட்ட அலுவலகம் 4 ஆம் மாடி வீரசிங்கம் மண்டபம்,இல 12 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பா ணம் அல்லது பிரதேச தொழிற் பயிற்சி நிலையங்களிலும் மேற்கொள்ள முடியும் விண் ணப்பங்களை பெற்றுக் கொள் வதற்கு 021 222 7949, 021 221 1793, 021 205 7047 மற்றும் 077 716 1955 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளமுடியும் என யாழ். மாவ ட்ட உதவிப்பணிப்பாளர் ந.நிரஞ் சன் அறிவித்துள்ளார். (4)

# மாணவர்கள் தமது கருத்துக்களை ஆளுநருக்குத் தெரிவிக்க முடியும்

## வடக்கு ஆளுநர் ஜீவன் தியாகராஜா



(யாழ்ப்பாணம்)

வட மாகாண பாடசாலை களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர் தர மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் பாடசாலைகளில் இரு ந்தவாறு தமது கருத்துக்களை வடமாகாண ஆளுநருக்கு தெரி விக்க முடியும் என வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

ஒவ்வொரு மாதமும் முன் கூட்டியே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் ஆளு நருடன் பேச முடிவதோடு குறி த்த வலையமைப்பில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாண கல்வி பணிப்பாளரும் தொடர்பில் இருப்பார்கள்.

குறித்த விடயம் தொடர்பில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரனை தொடர்பு கொண்டு கேட்டபோது ஆளுநரின் வழி காட்டலில் பாடசாலை மாண வர்களின் கருத்துக்களை ஆளு நர் கல்வி அமைச்சின் செய லாளர் மற்றும் மாகாண. கல்விப் பணிப்பாள ருடன் பகிர்ந்து கொள்ளும் செயற்பாடு இடம்பெற உள்ளது.

அதற்கான சகல நடவடிக் கைகளும் வட மாகாண கல்வி அமைச்சின் ஊடாக முன் எடுக்கப்பட்டு வருகின்ற நிலை யில் எதிர்வரும் வாரத்தில் குறித்த செயற்பாட்டை ஆரம் பிக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-104)

# வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரியின் விசேட அறிமுக நிகழ்வு நாளை

(யாழ்பாணம்)

வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டினை முன் னிட்டு நாளை 20 ஆம் திகதி திங்கட்கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல் லூரியினரால் விசேட அறிமுக நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டு ள்ளது.

காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபையின் பேராலயத்தில் விசேட ஆராதனை வழிபாடு கள் இடம்பெற்று, தொடர்ச்சியாக புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கல்லூரியின் பிக்னல் மெமோ றியல் மைதானத்தில் கல்லூரி யின் அதிபர் றுசைரா குல சிங்கம் தலைமையில் 200 ஆவது ஆண்டினை முன் னிட்டு 200 மரக்கன்றுகளை நாட்டும் செயற்றிட்டம் ஆரம் பித்து வைக்கப்படவுள்ளது.

அதன்பின்னர் 200 ஆவது ஆண்டினை முன்னிட்டு தயாரிக்கப்பட்ட விசேட சின்ன மும் கல்லூரியின் புதிய காலு றையும் 200 ஆவது ஆண் டினை முன்னிட்டு ஜேர்சி யும் அறிமுகப்படுத்தபடவுள் ளன. (4-104)

# மீசாலையில் விபத்து முதியவர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரி விற்குட்பட்ட மீசாலைச் சந்திப் பகுதியில் நேற்று சனிக் கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் முதியவர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

மீசாலை-பங்களா வீதியில் இருந்து ஏ9 வீதியை துவிச் சக்கரவண்டியில் கடக்க முற்பட்ட முதியவரை- கொடிகாமத்தி லிருந்து வந்த டிப்பர் வாகனம் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளது.

கால் மற்றும் தலைப் பகுதி களில் காயமடைந்த முதியவர் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச் சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன் னெடுத்து வருகின்றனர்.(4-30)

### சாவ.நகரசபைக்குட்பட்ட

# இரண்டு பேருந்து தரிப்பிடங்கள் இடித்து அழிக்க தீர்மானம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டு ஏ9 வீதியில் விபத்துக்கள் ஏற்பட ஏதுவாகக் காணப்படுகின்ற இரண்டு பேரு ந்து தரிப்பிடங்களை இடித்து அகற்ற சாவகச்சேரி நகரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

நகரசபையின் ஆளுகைக்கு உட்பட்ட அரசடிச் சந்தி மற்றும் மீசாலைச் சந்திப் பகுதிகளில் பொருத்தமற்ற இடங்களில் விபத்துக்கள் ஏற்பட ஏதுவான நிலையில் உள்ள சீமெந்தி லான பேருந்து தரிப்பிடங்களே இவ்வாறு இடித்து அழிக்கப்ப டவுள்ளன. குறித்த இரண்டு பேருந்து தரிப்பிடங்களும் விப த்து ஏற்பட ஏதுவாக காணப்படு கின்ற அதேவேளையில் சமூக விரோதச் செயற்பாடுகள் இடம் பெறவும் சாதகமாக காணப்பட்ட தனால் அவற்றை உடைத்து அகற்ற நகர சபையில் தீர்மா னம் எடுக்கப்பட்டது.

இடித்தழித்த பின்னர் பொரு த்தமான இடத்தில் திறந்த பேருந்து தரிப்பிடம் அமை க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள் ளது. (4-30)

# பரிசில் தின விழா

(கரணவாய்)

கரணவாய் மணியகா ரன் தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வருடாந்த பரிசில் தின விழா இன்று ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2 மணி க்கு பாடசாலை திறந்த வெளிஅரங்கில் பாடசாலை [illegible] நடைபெறும். (4-60)

# 'புலர்காலையின் வலி'

## சிறுகதை தொகுப்பு அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தாயதி வெளியீட்டக வெளி யீடான இயல்வாணன் எழுதிய "புலர்காலையின் வலி" சிறு கதைத் தொகுப்பின் அறிமுக விழா நாளை பி.ப 3 மணிக்கு இமையாணன் கலைமகள் முன்பள்ளி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. கலாநிதி சு.குணேஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ள இந் நிக ழ்வில் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தின் சமூக வியல்துறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், எழுத் தாளர் சித்தாந்தன் ஆகியோர் விமர்சன உரைகளை ஆற்று வர். நிகழ்வில் நூலை முல் லைத்தீவு வலயக் கல்விப் பணி ப்பாளர் இ.தமிழ்மாறன் வெளி யிட்டு வைக்க, தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப் பாளர் ந.காண்டீபன் பெற்றுக் கொள்வார். (4)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 384
Viber 076 636 3378



# அதிஉச்ச அதிகாரம் எதுவென்று கூறுங்களேன்

> சமஷ்டி என்று முட்டி மோத வேண்டாம். தரப்படும் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதே புத்திசாலித்தனம் எனக் கூறும் ஆட்சியாளர்கள் தமிழினத்துக்கு வழங்கப்படும் அதிகாரங்கள் எவை என்பதை தெளிவுபடுத்த வேண்டும்.

• அபிமன்யு

அதிகாரப் பகிர்வு என்ற சொற்பதம் இப்போது பேசுபொருளாக மாறி இருப்பதை உணர முடிகிறது.

அதிகாரங்கள் பகிரப்படவேண்டும் என்பதற்குள் ஒரு சாராருக்கு அதிகாரங்கள் மறுக்கப்பட்டிருக்கிறது என்ற உண்மைபொதிந்துள்ளது என்பதை புரிந்து கொள்ள முடியும்.

இந்த நாட்டில் சிறுபான்மைத் தமிழினத்தின் அதிகாரங்களை பெரும்பான்மை ஆட்சியாளர்களின் கைகளுக்குள் வைத்ததன் விளைவே போர் உச்சம் பெறக் காரணமானது.

அந்தப் போர் இரு இனங்களுக்குள் பாரிய பிரிவினையை உண்டு பண்ணியது என்பதே உண்மையானது.

இனங்களுக்கிடையில் முரண்பாடு எழ முக்கிய காரணமாக அமைந்தது அரசியல் சுயஇலாபம் என்பதை எவராலும் மறுத்துவிட முடியாது.

சிங்கள - தமிழ் அரசியல் தலைவர்களின் பதவி மோகம் இவ் இரு இனங்களுக்குள்ளேயும் புரிந்துணர்வை இல்லாது செய்து விட்டது.

சிங்களவர்களும் தமிழர்களும் புரிந்துணர்வை விரும்பினாலும் இரு இனத்து அரசியல்வாதிகளுக்கு இந்தப் புரிந்துணர்வை ஏற்கும் பக்குவம் வரவில்லை.

இதற்கு சுயநல அரசியல் எனும் குறுகிய சிந்தனையே காரணமாகிறது.

எங்கு பிரச்சினை எழுந்தது எனத் தெரிந்து கொண்டால் தானே அங்கு அதை தீர்க்கும் உபாயத்தைக் கண்டுபிடிக்க முடியும்:

ஆனால் இலங்கையில் நடந்ததோ வேறு மாதிரியே அமைந்தது.

ஆம் எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதாய் அரசியல் தலைவர்கள் நடந்து கொண்டனர்.

இதுவே இத்துணை அழிவுக்கும் காரணமாக அமைந்தது.

போர் தந்த பாடத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய விடயங்களை மறந்து மீண்டும் அதே சாக்கடை அரசியலை நடத்தினால் அது படு பாதகமான விளைவுகளையே தரும்.

இனி இந்த நாட்டில் இனங்களுக்கிடையிலான முரண்பாடு ஒருபோதும் எழுந்து விடக் கூடாது என்ற நேரிய சிந்தனையில் செயற்பட்டிருந்தால் 2009 ஆம் ஆண்டிற்குப் பின்னர் ஓரளவு நாடு முன்னோக்கிய பாதையில் பயணித்திருக்க வாய்ப்புகள் இருந்திருக்கும்.

ஆனால் அவை எவையும் நடந்ததாய் இல்லை.

மாறாக அரசுகளாயினும் சரி அரசியல்வாதிகளாயினும் சரி இவர்களின் செயற்பாடுகள் இனங்களுக்கிடையில் முரண்பாட்டை ஏற்படுத்தும் வகையிலேயே இருந்தது.



இந்த நாடு பெரும்பான்மைச் சிங்களவர்களுக்குரியது. எனவே இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்களைத் தவிர வேறு எவருக்கும் உரிமையில்லை என்ற குறுகிய எண்ணம் கொண்ட சில பௌத்த தலைவர்களின் வன்மம் போர் நிறைவடைந்து ஒரு தசாப்தம் கடந்த நிலையிலும் சிறுபான்மை இனத்தவர்களின் ஆகக் குறைந்த அதிகாரப் பகிர்வைக் கூட தடுக்கும் வகையில் உள்ளது.

இந்த நாட்டில் பல்வேறு இனங்கள் பூர்வீகமாக வாழ்ந்துவரும் நிலையில் எப்படி நாடு ஒரு சாராருக்கு மட்டும் உரித்துடையது என்ற கோட்பாட்டை ஏற்றுவிட முடியும்.

இதுவே இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடக் காரணமாகவும் அமைந்தது. இந்த சாதாரண உண்மையைக் கூடப் புரிந்திடாத அரச தலைவர்களும் பௌத்த தேரர்களும் எப்படி சிறுபான்மை இனத்தவர்களின் அதிகாரங்களை தர அனுமதிப்பார் என்ற உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலங்கையில் புரையோடிக் கிடக்கும் இனங்களுக்கிடையிலான பிரச்சினையை தீர்த்துவிட வேண்டும் என உலக நாடுகள் நினைத்திருந்தால் அடுத்தகணமே அதைச் செய்திருக்கலாம்..

ஆனால் அப்படிப்பட்ட அதிசயம் ஏதும் நடப்பதற்கு ஏதுவான காரணங்கள் எவையும் அமையவில்லை. இதற்கு உலக நாடுகளுக்குள் காணப்படும் வல்லரசு முரண்பாடுகளும் காரணமாகியது.

அமெரிக்க எதிர்ப்பு நாடுகள், ஆதரவு நாடுகள் என்ற பிரிவினையும் இலங்கையில் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதில் செல்வாக்குச் செலுத்தின என்பதை நாம் ஏற்றுத்தான் ஆகவேண்டும்.

இறுதி யுத்தத்தில் நடந்த போர்க்குற்ற மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டும் எனும் தீர்மானத்தை ஐ.நாவில் சமர்ப்பித்த அமெரிக்காவின் தீர்மானம் மீதான ஆதரவும் எதிர்ப்பும் இதைப் பறைசாற்றி நிற்கின்றது.

நிலை இதுவாக இருக்கையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 13 ஆவது திருத்தம் தொடர்பில் திருவாய் மலர்ந்ததும் அதற்கு பௌத்த தேரர்கள் பாரிய எதிர்ப்பை வெளியிட்டதும் நாம் அறிந்ததே.

13 ஆவது திருத்தச் சட்ட மூலம் இந்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் இதை தமிழினம் முழுமையான தீர்வாக ஏற்கவில்லை என்பதே உண்மை.

ஆயினும் 13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தியாக வேண்டும் என்பதில் இந்தியா உறுதியாக உள்ளது.

13ஆவது திருத்தச்சட்டமூலத்தின் ஊடாக தமிழினம் பொலிஸ்-காணி அதிகாரங்களைப் பெற்றால் அது தனி ஈழம் அமைவதற்கு ஈடானது என்ற எண்ணப்பாடு பெரும்பான்மை அரசியல் தலைவர்களிடையேயும் பௌத்த தேரர்களிடத்தேயும் காணப்படும் நிலையிலேயே 13 ஆவது திருத்தச்சட்டமூலத்திற்கு எதிராக முழக்கமிடத்தொடங்கி உள்ளனர்.

ஆரம்பத்தில் 13ஐ முழுமையாய் அமுல்படுத்துவேன் எனக்கூறிய ஜனாதிபதி தேரர்களின் எதிர்ப்பைத் தொடர்ந்து அதுதொடர்பில் மௌனம் காக்கத் தொடங்கி விட்டார். எனது அதிகாரத்தைப் பயன்படுத்தி 13 ஆவது திருத்தச்சட்டமூலத்தை நிறைவேற்றியே தீருவேன் எனக் கூறிய ஜனாதிபதி தற்போது, கிடைக்கும் அதிகாரங்களை முதலில் பெற்றுக் கொள்ளுங்கள் எனப்பேசத் தலைப்பட்டுள்ளார்.

கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றில் ஜனாதிபதி ஆற்றிய கொள்ளை விளக்க உரையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அவரின் உரையில் "நான் திரும்ப திரும்ப சொல்கிறேன் சொல்லாடல்களை வைத்து கருத்து மோதல் வேண்டாம். ஒற்றையாட்சிக்குள் அதிகாரப்பகிர்வு எனக் கூறியது உண்மை. இந்த நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கிறேன்.

கிடைக்கின்ற அதிகாரங்களை முதலில் பெற்றுக்கொள்ளுங்கள். இதை விடுத்து சமஷ்டி என்று முட்டி மோதினால் அது வடக்குக்கும் தெற்கிற்கும் இடையில் மேலும் இன ரீதியான விரிசலையே ஏற்படுத்தும். இதை சம்பந்தப்பட்ட தமிழ் அரசியல் தலைவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்" என்று கூறியிருக்கிறார். இது விடயத்தில் தமிழனத்தின் கேள்வி என்னவெனில் உங்களால் தமிழனத்துக்கு வழங்கப்படும் அதிகாரப் பகிர்வின் எல்லை எது?

கிடைக்கின்ற அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளுங்கள் என ஜனாதிபதி கூறியிருக்கின்றாரே தவிர கிடைக்கப்போகும் அதிகாரங்கள் எவை என்பதை அவர் கூறாதது ஏன் என்ற கேள்வியும் தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

இந்த நாடு அனைவருக்கும் சமமானது. இங்கு பெரிது-சிறிது என்ற பேதத்துக்கு இடமில்லை. இந் நிலையிலேயே தமிழினம் தனது உரிமைகளை வழங்க கோரி நிற்கிறது.

உரிமைகளை வழங்க மறுத்ததனாலேயே தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி அரசுகளுக்கு எதிராக போரிட்டனர்..

இவற்றைக் கருத்தில் கொண்டு தமிழனத்துக்கு எம்மால் வழங்கப்படும் உச்ச அதிகாரங்கள் எவை என்பதை முதலில் ஆட்சியாளர்கள் அறிவிக்க வேண்டும்.

அந்த அதிகாரங்கள் தமிழினம் சமத்துவத்துடன் வாழ போதுமானது என தமிழினம் கருதினால் ஏற்றுக் கொள்வார். இல்லையேல் மீண்டும் பூச்சியத்தில் இருந்து தொடங்குவதாகவே அமையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர். தொடர்ந்து பண்டிதர் பரமலிங்கம் எழுந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் அவர்கள் காலமான செய்தி அறிந்து வேதனையடைகின்றோம்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்த பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தமிழ்ப் பற்றோடு பணியாற்றியவர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எங்கள் தமிழ் உறவுகளை நினைவேந்துகின்ற நடைமுறைக்கு பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்கள் ஆற்றிய வகிபாகம் காத்திரமானது.

தனது பதவியையும் பொருட்படுத்தாமல், தமிழ் இனத்திற்காகத் தன்னை அர்ப்பணித்த பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

மௌன அஞ்சலியோடு ஆலடியில் சில நிமிடம் மௌனம் நிலவியது. மௌனத்தைக் கலைக்க விதானையார் விசுவலிங்கம் குரல் கொடுத்தார்.

**விதானையார்:** இந்திய மத்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட யாழ்ப்பாணக் கலாசார மத்திய நிலையத்தின்ர நிர்வாகப் பிரச்சினை இன்னமும் தீர்ந்த பாடில்லை.

நிலையத்தை கையளிக்க முன்பாக அதன் நிர்வாகம் யாரிடம் இருக்க வேண்டும் என்பதை இந்தியா நிர்ணயம் செய்திருக்க வேண்டும்.

அதைச் செய்யாததால இப்ப பௌத்த சாசன அமைச்சின்ர கையில அந்தக் கலாசார நிலையம் கிடக்கிறது.

**பண்டிதர்:** அதுமட்டுமல்ல, யாழ்ப்பாண திறந்தவெளி அரங்கில இருந்த நடராஜர் சிலையை கலாசார மத்திய நிலையத்தில வைத்திருக்க வேண்டும். எனினும் அது இன்னமும் நடந்தாகவில்லை. இது விடயத்தில யாழ்ப்பாணத்தில இருக்கிற இந்தியத் துணைத்தூதரகம் உரிய நடவடிக்கை எடுத்தாக வேண்டும் எண்டு இந்தச் சந்தர்ப்பத்தில கேட்டுக் கொள்கின்றோம்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் இடையில் குறுக்கிட்ட வாத்தியார் வைத்திலிங்கம்; திறந்தவெளி அரங்கில இருந்த நடராஜர் சிலையை கலாசார மத்திய நிலையத்தின் மேல்தளத்தில வைக்காவிட்டால், அது தொடர்பில இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களிற்கு அவசர கடிதத்தை அனுப்பி வைக்க வேண்டும்.

**சாத்திரியார்:** நீங்கள் என்ன சொன்னாலும் சைவ மக்களின்ர கோரிக்கைகள் இஞ்ச எடுபடாது.

இந்தாப் பாருங்க யாழ்ப்பாணத்து கலாசார நிலையத்தை திறந்து வைத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தக் கலாசார நிலையத்திற்கு சரஸ்வதி மஹால் எண்டு பெயர் சூட்டுவது பொருத்தம் எனக் கூறியிருந்தார். ஆனால், நாங்கள் யாரேனும் அந்தப் பெயர் பொருத்தம் எண்டு சொன்னோமா?

இந்த நாட்டின் ஜனாதிபதி ஒரு பௌத்த சிங்களவராக இருந்த போதிலும் கலைத் தெய்வமாகிய சரஸ்வதித் தாயின் பெயரை இந்தக் கலாசார நிலையத்திற்குச் சூட்டுவது பொருத்தம் எனக் கூறினார்.

ஆனால், நாங்களோ அது பற்றி இம்மியும் கவனம் செலுத்தாமல், ஏதேதோ சிந்திக்கிறோம். இஞ்சதான் எங்க[illegible] எல்லாத்தையும் நாசமறுக்கிறது.

இவ்வாறு வாத்தியார் கூற, மீண்டும் ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் கலைக்க சிறாப்பர் கனகசபை குரல் கொடுத்தார்.

**சிறாப்பர்:** எங்களிடம் பலமான அரசியல் தலைமை இல்லை. இருக்கிறவியளும் உதிரிகளாகச் செயற்படுகினம். உதாரணத்திற்கு வடக்கு மாகாண ஆளுநரை மாற்ற வேண்டும் எண்டு ஒரு சில தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்க, இன்னும் ஒரு சில தமிழ் எம்.பிக்கள் இல்லை மாற்றக் கூடாது எண்டு சொல்லுகினம்.

எதிலும் ஒற்றுமை இல்லாத காரணத்தால் எங்கட தமிழினத்தைக் கூறுபோட்டு, தான் சாதிக்க வேண்டியதை பேரினவாதம் கனகட்சிதமாகச் செய்து முடிக்குது.

**மூப்பர்:** சிறாப்பர் சொல்லுறது நூறு வீதம் உண்மை. தமிழ் மக்களின்ர பிரச்சினையைத் தீர்ப்பது போல் அரசாங்கம் பாசாங்கு செய்து, தமிழ் மக்களைக் கண்ட பாட்டில ஓரங்கட்டுது. எனினும் இது பற்றி எங்கட தமிழ் அரசியல்வாதிகளுக்கு ஏதேனும் தெரியுமோ எண்டு கூடத் தெரியல்ல.

சாத்திரியார்: மூப்பர் என்ன சொல்லுறியள் சொல்லுவதைக் கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்களேன்.

**மூப்பர்:** கடந்த 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் உள்ளக ரீதியில கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் (ADO) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றது. இதில தமிழ்ப் பகுதிகளில் யாழ்ப்பாணத்தில் இருந்து 09 பேரும் கிளிநொச்சியில் இருந்து 04 பேரும் முல்லைத்தீவில் இருந்து 03 பேரும் மன்னாரில் இருந்து 04 பேரும் பரீட்சைக்குத் தோற்றியிருந்தினம். கடந்த 15 ஆம் திகதி அதன் றிசல்ட் வெளியாகியிருந்தது.

இதில் அகில இலங்கை ரீதியில் தமிழர் ஒருவரும் முஸ்லிம் ஒருவரும் சித்தியடைந்துள்ளனர்.


சிங்களவர்களில் 34 பேர் சித்தி பெற்றிருக்கினம்.

தமிழர் பகுதியில கமநல அபவிருத்தி உத்தியோகத்தர் பதவியில கணிசமான வெற்றிடம் இருக்கின்ற போதிலும் தமிழர் ஒருவருக்கு மட்டுமே அந்த நியமனம் கிடைக்க, சிங்களவரில 34 பேருக்கு இந்த நியமனம் கிடைத்திருக்குது எண்டால், எங்கள எப்படியெல்லாம் ஓரங்கட்டுகினம் எண்டு பாருங்கஎன்.

**விதானையார்:** இதுகள் பற்றி எங்கட தமிழ் அரசியல்வாதிகளுக்கு எதுவும் தெரியப் போறதில்லை. உண்மையில இந்த விடயம் பாராளுமன்றத்தில கதைக்கப்பட வேணும்.

இதை இப்படியே விட்டால், தமிழர் தேசத்தில சிங்களவர் தான் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக இருக்கிற நிலைமை ஏற்படும்.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல் ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.



## கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனத்தில தமிழர்கள் புறக்கணிப்பு

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பது உண்மையா?

**ஆர்.கே — யாழ்ப்பாணம்**

**பெப்ரவரி 14 காதலர் தினம் கொண் டாடினீர்களா வியாசரே? பண்ணைக் கடற்கரைப் பக்கம் தங்களைக் கண்ட தாக பலர் கூறினார்கள் உண்மையா?**

பல் இருக்கும் போது தான் பகோடா சாப் பிட முடியும் என்றொரு புது மொழி உண்டு.
என்ன செய்வது பல் இல்லாத என்னால் எப்படி பகோடா சாப்பிட முடியும் சொல் லுங்கள்.
ஆதலால் நீங்கள் ஆள் மாறிப் பார்த்து விட்டீர்கள் போல.
அது சரி அந்த இடத்தில் உங்களுக்கு என்ன வேலை என்று அறிய முடியுமா?

**சங்கரசிவன் — வதிரி**

**சரத் வீரசேகர ஜனாதிபதியாகவும் விமல் வீரவன்ச பிரதமராகவும் இருப்பது போல கனவு கண்டேன் வியாசரே?**

உங்கள் கனவில் தீயை வைக்க. கனவு காண்பதற்கும் ஒரு எல்லை இருக்கிறது சிவன்.
போயும் போய் இப்படி ஒரு கனவைக் கண்டு தொலைத்துவிட்டீர்களே.
நீங்கள் கண்ட கனவு அதிகாலையில் இல்லைத்தானே. அதிகாலைக் கனவுகள் பலிக்கும் என்பார்கள். அதனால் தான் சற்று பதற்றமாக இருக்கிறது.
தமிழினத்தின் மீது வன்மத்தைக் கக்கும் இரு பெரும் துருவங்கள் இவர்கள்.
அதிகாரத்தில் இல்லாத போதே இவர்களின் பேச்சுக்கள் இப்படி இருக்கிறது என்றால் அதிகாரம் இவர்கள் கைகளில் இருந்தால்...
சிவசிவா.. நினைக்கவே நெஞ்சு வெடிக்கிறது.

**அகிலன் — கனகராஜன்குளம்**

**தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வே. பிரபாகரன் உயிருடன் இருக்கிறார் என்பது உண்மையா?**

பழ.நெடுமாறன் ஐயா இவ்விடயத்தை கூறியதும் உலக நாடுகள் ஒருகணம் விழித்து கொண்டன என்பது தான் உண்மை.
ஆம், அவ்வளவுக்கு அவரின் கருத்து உலகையே புரட்டிப்போடும் அளவில் இருந்தது.
உலகில் இருந்த- மறைந்த எந்தத் தலைவருக்கும் இல்லாத ஒரு பெருமை இவ்விடயத்தில் தலைவர் பிரபாகரனிடம் இருக்கிறது.
அவர் உயிருடன் இருக்கிறார் என்பதை பலர் ஏற்கவில்லை. இதில் எமது அரசியல் தலைவர்கள் பலர் பல்வேறு தகவல்களை வழங்கியிருந்தனர்.
அதில் சரத் வீரசேகர கூறியது என்னவெனின் பிரபாகரன் இருக்கிறாராம்.
ஆனால் நரகத்தில் இருக்கிறார் என எகத் தாளமாக பேசியிருக்கிறார்.எல்லாம் விதி அவ் வளவே.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்

**மதுவன் — மீசாலை**

**காட்டு ராஜா சிங்கம் என்கிறார்கள் யானை சிங்கத்துக்கு பயமா வியாசரே?**

சிங்கங்கள் யானைகளை ஒருநாளும் சீண்டு வதில்லை. ஏனெனில் அவைக்குத் தெரியும் யாரு டன் தான் மோத வேண்டும் என்பது.
இதைவிட தான் யானையுடன் மோதினால் அதன் விளைவு எப்படி இருக்கும் என்பதும் தெரியும்.
இவை அனைத்தையும் விட காட்டு ராஜாவான சிங்கம் யானையுடன் மோதி தோற்றுவிட்டதாய் வரலாறு மாறினால் தான் ராஜாவாக இருக்க முடி யாது என்பதும் சிங்கத்துக்குத் தெரியும். ஆதா லால் சிங்கம் யானையிடம் அடக்கியே வாசிக்கும்.

**சுதன் — குப்பிழான்**

**இறந்துவிட்ட பிரபாகரனுக்கு ஏன் இன்றுவரை தடைபோடப்பட்டுள்ளது.**

இந்த சந்தேகம் உங்களுக்கு மட்டுமல்ல பலருக்கும் இருக்கிறது.
பழ.நெடுமாறன் ஐயா இன்று நேற்றல்ல 14 ஆண்டுகளாக பிரபாகரன் இருக்கிறார் என்று கூறிக் கொண்டு தான் இருக்கிறார்.
ஆனாலும் இம்முறை இதற்கென்று ஒரு பத்திரிகையாளர் மாநாடு வைத்து கூறியதற் குள் இருக்கும் பொருள் என்னவென்று தான் புரியவில்லை.
இறந்தால் என்ன இருந்தால் என்ன தடை தடைதான். இது தான் எங்கள் அரசின் கடும் தீர்மானம்.



சரத் வீரசேகர ஜனாதிபதியாகவும் விமல் வீரவன்ச பிரதமராகவுமு; இருப்பது போல கனவு கண்டேன் வியாசரே?

**சஜன் — மீசாலை**

**காகம் ஏன் கறுப்பாக இருக்கிறது என்று கூறமுடியுமா வியாசரே?**

கறுப்பு உழைப்பின் அடையாளம், ஒற்று மையின் அடையாளம், நம்பிக்கையின் அடையாளம்.
இவ்வாறு சிறப்புப் பெற்ற கறுப்பை தன் நிறமாய்க் கொண்ட காகங்களிடத்தேயும் உழைப்பு உண்டு. ஒற்றுமை நிறையவே உண்டு.நம்பிக்கை மிக அதிகம் உண்டு.
உங்களால் ஒரு ஐந்து நிமிடம் ஒரு காக்கை யின் இறகை கையில் வைத்துக் கொண்டு நின்றுவிட முடியுமா?
அந்த ஐந்து நிமிடத்திற்குள் ஐயாயிரம் காக் காய்கள் ஒன்று சேர்ந்துவிடும்.
இதுவே காகத்தின் பெருமை. அதுவே ஒற் றுமையின் சின்னம்.
சின்ன விண்ணப்பம். அடியேன் வியாசரும் கறுப்புத்தான்.

**சஞ்சு — கிளிநொச்சி**

**காதல் பற்றி உங்கள் எண்ணம் என்ன என்பதை கூறமுடியுமா வியாசரே?**

கருவில் இருக்கும் போது அன்னையைக் காதலித்தேன். இன்றுவரை அந்தக் காதல் தொடர்கிறது.
கல்விகற்கும் போது ஆசிரியரைக் காதலி த்தேன். இன்றுவரை அந்தக் காதல் தொடர் கிறது.
வேலை கிடைத்ததும் வேலையைக் காதலி த்தேன். இன்றுவரை அந்தக் காதல் தொட ர்கிறது.
திருமணம் முடிந்ததும் மனைவியைக் காத லித்தேன். இன்றுவரை அந்தக் காதலும் தொடர்கிறது.
இடையில் வயதுக் கோளாறில் சில பல காதல் கள் வந்தன சென்றன ஆனால் அவை எவையும் என்னுடன் தொடரவே இல்லை.

**வம்சினி — யாழ்ப்பாணம்**

**உண்மையான அரசியல்வாதி என்பவன் யார் வியாசரே?**

மக்கள் உரிமைகளை வென்றெடுக்க வேண் டும் என்ற எண்ணத்துடன் வாழ்பவனே உண்மையான அரசியல்வாதி.
அவனிடத்தே தன் சொத்துக்களை விற்று மக்கள் துயர் தீர்க்கும் எண்ணம் இருக்குமே தவிர மக்கள் வயிற்றில் அடித்து தான் சொத் துச் சேர்க்கும் எண்ணம் இருக்காது.
ஏ.சி காரோடும் எண்ணம் எள்ளளவும் இருக்காது.பாரில் தன் மக்கள் படும் துன்பம் கண்டு துடிக்கும் மனம் இருக்கும்.
வரவு-செலவுத் திட்டத்துக்கு கை உயர்த்த ஒரு கோடியும் தலை அசைக்க இரு கோடியும் அமர்வுக்கு வந்து சிலையாய் இருக்க மூன்று கோடியும் வாங்கி சுவிஸ் வங்கியல் போடும் ஈனத்தனம் எப்போதும் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: சரஸ்வதி சபதம்
பாடியவர்: T.m. சௌந்தரராஜன்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: K.V. மஹாதேவன்



ராணி மகாராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
ராணி மகாராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
ராணி மகாராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி

நேற்று வரை வீதியிலே நின்றிருந்த ராணி
நிலைமை தனை மறந்து விட்ட தலைகனத்த ராணி
நேற்று வரை வீதியிலே நின்றிருந்த ராணி
நிலைமை தனை மறந்து விட்ட தலைகனத்த ராணி
யானை மாலை போட்டதாலே ஆள வந்த ராணி

அழுகு பொம்மை போல வந்து
கொலுவிருக்கும் ராணி
யானை மாலை போட்டதாலே
ஆள வந்த ராணி
அழுகு பொம்மை போல வந்து
கொலுவிருக்கும் ராணி
அழுகு பொம்மை போல
வந்து கொலுவிருக்கும் ராணி

ராணி மகாராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி

கவியரசைப் புவியரசு வெற்றி கொண்டதுண்டா
கலைமகளைத் திருமகள்
தான் வெற்றி கண்டதுண்டா
கவியரசைப் புவியரசு வெற்றி கொண்டதுண்டா
கலைமகளைத் திருமகள்
தான் வெற்றி கண்டதுண்டா
சபையறிந்த புலவனுக்கு சிறையும் ஒரு வீடு
அறிவிழந்த அரசியர்க்கு நாடும் ஒரு காடு
சபையறிந்த புலவனுக்கு சிறையும் ஒரு வீடு
அறிவிழந்த அரசியர்க்கு நாடும் ஒரு காடு

ராணி மகாராணி ராணி மகாராணி
ராஜ்ஜியத்தின் ராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
ராணி மகாராணி ராஜ்ஜியத்தின் ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி
வேக வேகமாக வந்த நாகரீக ராணி

# இல்லறமே உலகில் உயர்ந்த நல்லறம்

வண்டில் சில்லுக்கு என்றுமே அச்சாணி ஆதாரமாய் இருப்பது போல். இந்த பிரபஞ்சத்தின் அனைத்து விதமான உயிர்ப்புக்கும் அதன் இயக்கத்திற்கும் அதை அழிய விடாமல் பாதுகாப்பதற்கும் எப்போதும் அதன் ஆதாரமாய் இருப்பது. மனித வாழ்வின் மகத்துவங்களில் ஒன்றான இல்லறம் ஒன்றே என்றால் அது ஒரு போதும் மிகையாகாது.

அகம், புறம் சார்ந்த அனைத்து வாழ்வியல் கோட்பாடுகளையும் அதனுடன் இணைந்த தத்துவங்களையும் ஆன்மிக ரீதியாகவும் மற்றும் உலகியல் ரீதியாகவும் உலகுக்கு உற்பத்தி செய்து போதிக்கும் ஒரு குருகுலமாக இவ்வுலகில் இல்லறமே என்றும் மேலோங்கி நிற்கின்றது.

மனித வாழ்வின் அடிப்படையான கல்வி. அது கட்டமைத்து தந்த அறிவு மற்றும் பட்டுத் தெளிந்த அனுபவ பாடமான பட்டறிவு இவை எல்லாவற்றையும் இல்லறம் திரும்பத் திரும்ப இந்த பிரபஞ்சத்துக்கு கற்றுத் தருகின்றது.

தர்மத்தை விட்டு எள்ளளவும் பிசகாதே என்ற நிபந்தனையுடன் இல்லறத்தை போற்றாத, புகழாத மதங்களோ, ஞானிகளோ இல்லை என்று சொல்லி விடலாம். அதனால் தான் திருக்குறளிலே திரு வள்ளுவர் "துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வான் என்பான் துணை" என்று இல்லறத் தான் செய்ய வேண்டிய தர்மத்தைப் பற்றி குறிப்பிடுகின்றார்.

அதாவது தன்னை அறிய தவம் வேறில்லை என்று துறவு பூண்டவர்களுக்கும் வறுமையில் வாடுபவர்களுக்கும் இவ்வுலகில் வாழ்ந்து உயிர்நீத்த ஆன்மாக்களுக்கு நீர்க் கடன் செய்வதற்கும் ஒரு இல்லறத்தான் எப்போதும் அரணாகவே விளங்குகின்றான்.

மேற் சொன்ன இந்த மூவர்க்கும் இல்லறத்தான் அரணாக இருக்கின்றபோது தர்மம் என்பது இல்லறத்திலிருந்தே உலகுக்கு வெளிப்படுகின்றது என்பதை [illegible] அறிந்து கொள்ள முடியும்.

ஒரு தேசத்தின் வளர்ச்சியும் அதன் மறுமலர்ச்சியும் அந்த தேசத்தில் நடத்தப்படுகின்ற ஒவ்வொரு இல்லறம் சார்ந்த தர்மத்தில்தான் பெரிதும் தங்கியுள்ளது. அதிலும் அதி சிறப்பு வாய்ந்த இல்லற தர்மம் என்பது கீழைத் தேசத்தில்தான் இன்று வரை நடைமுறையில் உள்ளது என்பதை நாம் ஒருபோதும் மறத்தலாகாது.

தர்மம் சார்ந்த இல்லறத்தினுடைய அதியுச்ச சிறப்பை வைத்தே ஒரு தேசத்தினுடைய தர்மத்தையும் அந்த தர்மத்தால் விளைந்த நன்மைகளைப் பற்றியும் நாம் அறிந்து கொள்ள முடியும். ஏன்..? என்றால் இல்லறத்தில் இருந்துதான் தேசத்தின் எல்லை வரை தர்மம் விசாலமடைகின்றது.

ஒரு நதி தான் தடம் பதிக்கும் இடம் எல்லாவற்றையும் செழிப்பாக்கி பயணிப்பது போல, இல்லறமும் தர்மத்தை எங்கும் செழிப்பாக்கி மரணத்தை வெல்லும் வரை நெடுந்தூரம் பயணிக்கின்றது.

நல்ல புத்திரர்களைப் பெற்று சமூகத்தின் சேவை



க்கு அர்ப்பணித்தல் இல்லறத்திலிருந்தே நல் ஒழுக்கத்தை எங்கும் பரவச் செய்தல். ஒரு தேசத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு எப்போதும் அடித்தளமாக அமைவது இல்லறத்தான் மேற்கொள்கின்ற விவசாயம் மற்றும் சிறு கைத்தொழில்கள் என்பவற்றைக் குறிப்பிட்டுக் கூறிவிடலாம்.

பல தேசங்களில் ஒடுக்கப்படும் ஒரு இனத்தினுடைய உரிமைக்காக போராடும் விடுதலை அமைப்புக்களுக்கும் அதன் படைகட்டுமானங்களுக்கும் அதன் புலனாய்வுக்கும் கூட இல்லறத்தானின் துணையே எப்போது காவல் ஆகின்றது. ஏனெனில் உண்ணும் அன்னத்திலிருந்து அணியும் உடையிலிருந்து தேசத்தின் நலன் கருதி நன்கொடையாக கொடுக்கும் பணம் வரை எல்லாம் அவனிடம் இருந்தே செல்கின்றது. இதிலிருந்து அவனின் தேச பக்தியை நாம் கண்டு கொள்ள முடியும்.

எல்லோரும் துறவிகள் ஆனால் உலகத்தின் இயக்கம் என்னாவது, தேசங்கள் என்னாவது, அதன் மக்கள் என்னாவது, அதன் ஜனநாயகம் என்னாவது என்ற ஒரு நிலை உருவாகின்றது. அதனால்தான் துறவறத்தை விட இல்லறமே சிறந்தது என்று எமது முன்னோர்கள் நினைத்தார்கள். அதனால் தான் அவர்கள் இல்லறத்தில் செம்மையாக வாழ்ந்து கடவுளை தம் ஆன்மாவுக்குள் அனுபூதியில் கண்டு கழித்தார்கள்.

துறவறம் விமானத்தில் பறந்து செல்வதைப் போன்றது. இல்லறம் நடந்து செல்வதைப் போன்றது. முதலாவது சீக்கிரம் சென்று விடலாம். ஆனால் பல தடங்கல்கள் உண்டு. இரண்டாவதோ இளைப்பாறி இளைப்பாறிச் சென்று விடலாம். ஆனால் போகும் இடமெல்லாம் பல விதமான சுவையான அனுபவங்கள் உண்டு. அதனால் இல்லற தர்மமே என்றும் மேலான தர்மமாகும்.

நவீன நாகரீகத்துக்குள் இல்லற தர்மத்தை ஒரு போதும் மூழ்கடிக்காமல் தர்மத்தை இந்த பிரபஞ்சம் முழுவதும் நிலை நாட்ட வேண்டும் என்ற வேட்கையுடன் எதிர்காலத்தில் இல்லறத்தை நல்லறம் வாய்ந்த தர்மமாக மாற்றி அதற்குள் கடவுளை உணர முயற்சி செய்யுங்கள். அதுவே கணவன் மனைவியாகிய இருவரையும் பிறவித் தழையில் இருந்து விடுபட உதவும்.

சாம் - ரமேஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலநடுக்கம் ஏற்படப் போவதை முன்கூட்டியே கணிக்க முடியுமா?

**பூகம்பம் எப்போது வரும் எனக் கணிக்கக் கருவிகள் எதுவும் இல்லை. இத்தகைய கருவியைக் கண்டறிந்தால் லட்சக்கணக்கான உயிரைக் காப்பாற்றலாம். யார் இந்த மகத்தான கண்டுபிடிப்பை செய்வார்கள் எனப் பார்ப்போம்.**

சிரியா எல்லையையொட்டிய துருக்கியின் காஸியான்டெப் நகரில் கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி ஏற்பட்ட அந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 7.8 அலகுகளாகப் பதிவானது. அந்த நிலநடுக்கத்தைத் தொடர்ந்து பல பின்னதிர்வுகள் ஏற்பட்டன. அவற்றில் ஒரு பின்னதிர்வு ரிக்டர் அளவுகோலில் 7.5 அலகுகளாகப் பதிவானது.

இந்த நிலநடுக்கத்தால் துருக்கியின் தெற்கு மற்றும் மத்திய பகுதியும் சிரியாவின் வடக்குப் பகுதியும் மிகக் கடுமையாகக் குலுங்கின. ஆயிரக்கணக்கான வீடுகள் தரை மட்டம் ஆகின. உயிரிழப்புகள் இன்றுவரை 40 ஆயிரத்தை கடந்துள்ளது என்ற சோக செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

இந்த துயர சம்பவத்தால் நிலநடுக்கம் ஏன் ஏற்படுகிறது.. என்ற கேள்வி அனைவருக்குள்ளும் எழுந்துள்ளது. அதற்கு பதில் காணும் முன்னர் நிலப்பரப்பின் அமைப்புகளையும் தன்மைகளையும் நாம் முதலில் தெரிந்து கொள்வோம்.

பூமிப்பந்தின் மையப் பகுதியை அடைய 6370 கிலோமீற்றர் பயணிக்க வேண்டும். இந்தப் பகுதியில் புவியீர்ப்பு சக்தி மிக மிக அதிகமாக உள்ளது. இதனால் இங்கு உள்ள உலோகப் பொருட்கள் திட நிலையில் உள்ளது. ஆனால் இதனைச் சுற்றியுள்ள உலோகப் பொருட்கள் திரவ நிலையில்தான் உள்ளது. இதன் வெப்பநிலை சுமார் 5200 டிகிரி செல்சியஸ் ஆகும்.

மண்ணும் பாறையுமான பூமியின் மேற்பரப்பு, ஏழு பெரிய துண்டுகளாக இந்த கொதிக்கும் திரவப் பொருள் மேல் மிதந்தபடி உள்ளது. இந்த துண்டுகளைப் பூமியின் மேல் ஓடுகள் என அழைக்கப்படுகின்றது. இதனை ஆபிரிக்கா, அண்டார்டிக்கா, யூரேசியா, தென் மற்றும் வட அமெரிக்கா, பசுபிக், இந்திய-அவுஸ்திரேலியா மேலோடுகள் எனப் பெயரிட்டுள்ளன. இந்த மேலோடுகளைத்தான் நாம் ஏழு கண்டங்கள் எனக் கூறுகிறோம்.

பூவியியலாளர்கள் பெரிய இந்திய-அவுஸ்திரேலிய மேலோட்டைப் பிரித்து,இந்திய மேலோடு மற்றும் அவுஸ்திரேலிய மேலோடு என்றும் வகைப்படுத்துகின்றனர். அதாவது இந்த ஏழு மேலோடுகள் எனப்படும் கண்டங்கள் கடலில் பெரிய கப்பல்கள் மிதப்பது போல் இவைகள் கொதிக்கும் உலோகத்தில் மிதக்கின்றன என்பதனை மறக்கக்கூடாது.


இவை ஒரே இடத்தில் மிதப்பதில்லை. மாறாக பல கோடி ஆண்டுகளாக இவை நகர்ந்தபடியேதான் இருக்கிறது. சில வேகமாகவும் சில மிகவும் மெதுவாக நகர்கின்றன. இவை ஒரு வருடகாலத்தில் சுமார் பத்து சென்ரிமீற்றர் வரை நகர்கிறது.

இந்தியத் துணைக்கண்டம் வேகமாக நகர்ந்து யூரேசியாவுடன் மோதியதால்தான் இமயமலையே உருவானது! இந்த கண்டங்கள் நகர்வதால்தான் உயர்ந்த மலைகளும், பயங்கர பூகம்பமும், அபாயகரமான எரிமலைகளும் உருவாகியுள்ளன.

கண்டங்கள் ஒன்றிலிருந்து ஒன்று விலகியபடி நகர்ந்தால், இரு கண்டங்களின் விளிம்பு பகுதியில் பல சிறிய ரக எரிமலைகளும் சிறுசிறு பூகம்பங்களும் ஏற்படும்! இதனால்தான் பசுபிக் கடற்கரைப் பகுதியில் நிறைய எரிமலைகள் காணப்படுகின்றன. இங்கே அடிக்கடி நிலநடுக்கங்களும் வருகின்றன. இதனால் இந்தப் பகுதியை நெருப்பு வளையம் என அழைக்கப்படுகிறது.

அதே நேரத்தில் கண்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதவும் செய்கின்றன. இவ்வாறு ஜப்பான் நாட்டுப் பகுதிகளில் கண்டங்கள் இன்றும் ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டுதான் இருக்கிறது. இதனால்தான் ஜப்பானில் அதிக அளவில் நிலநடுக்கத்தால் பாதிப்பு வருகிறது. மேலும் ஜப்பானில் அதிகமாக வெப்ப நீரூற்றுக்களும் எரிமலைகளும் காணப்படுகின்றன. ஜப்பானில் இயற்கையாக அமைந்துள்ள வெப்ப நீரூற்றுகள் பசுமை நிறைந்த அடர்ந்த அழகிய காடுகளில் காணப்படுகின்றன.

இரண்டு கண்டங்கள் ஒன்றுடன் ஒன்று உரசிக்கொண்டு நகரவும் செய்யும். இதனால் உரசிக் கொள்ளும் பகுதிகளில் நிலநடுக்கம் ஏற்படுகிறது. இந்த வகை நிலநடுக்கம் சக்தி வாய்ந்ததாக இருக்கும். நிலநடுக்கத்தின் வலிமை ரிக்டர் அளவில் அளக்கப்படுகிறது. நிலநடுக்கம் ரிக்டர் அளவு இரண்டுக்கு கீழ் இருக்குமானால் நம்மால் உணர முடியாது. இதனை நிலநடுக்கத்தை அளக்கப் பயன்படும் கருவியான சிஸ்மோமீற்றரால் மட்டுமே கண்டறிய முடியும்.




நிலநடுக்கம் இரண்டிலிருந்து மூன்று ரிக்டர் அளவில் இருந்தால் கட்டி தொங்கவிடப்பட்ட மின்விசிறிகள் மற்றும் விளக்குகள் ஆட தொடங்கும்.

மூன்றிலிருந்து நான்கு ரிக்டர் அளவு நிலநடுக்கம் ஒரு பெரிய லாரி வேகமாகச் செல்லும் போது ஏற்படும் அதிர்வை ஏற்படுத்தும்.

நடுக்கம் நான்கிலிருந்து ஐந்து ரிக்டர் அளவில் ஜன்னல்கள் உடையத் துவங்கும்.

ஐந்திலிருந்து ஆறு ரிக்டர் அளவு நிலநடுக்கத்தில் சிமெந்து பூச்சுகள் கழன்று விழும் மற்றும் ஜன்னல் கண்ணாடிகள் நொறுங்கும். ஆறிலிருந்து ஏழு ரிக்டர் அதிர்வில் தரமற்ற கட்டடங்கள் தரைமட்டமாகும். வலுவான கட்டடங்கள் உடைய ஆரம்பிக்கும்.

ஏழிலிருந்து எட்டு ரிக்டர் நிலநடுக்கத்தில் அஸ்திவாரத்திலிருந்து கட்டடம் நகரும் பின்னர் இடிந்து விழும். மற்றும் பாதாளச்சாக்கடை உள்ளிட்ட பூமிக்குள் புதைத்து வந்துள்ள குடிநீர் குழாய்கள் அனைத்து நொறுங்கும்.

எட்டிற்கு மேல் இருந்து ஒன்பது ரிக்டர் நிலநடுக்கத்தில் வலுவாகக் கட்டப்பட்ட பாலங்களும் கட்டடங்களும் தரைமட்டமாகும்.

ஒன்பது ரிக்டர் அளவிற்கு மேல் பூமில் ஏற்படும் நடுக்கத்தைக் கண்ணால் காணலாம். அனைத்து கட்டடங்களும் தரைமட்டமாகும் மற்றும் மலைகள் கூட உடைந்து சரிய ஆரம்பிக்கும்.

சிரியா மற்றும் துருக்கியைத் தாக்கிய இந்த நிலநடுக்கத்தின் வலிமை 7.8 ரிக்டர் அளவாக இருந்தது. இதனால் பல ஆயிரக்கணக்கான கட்டடங்கள் தரைமட்டமாயின. இது கடந்த சில நூற்றாண்டுகளில் நடந்த மிகவும் மோசமான நிலநடுக்கமாகும்.

1138 ஆம் ஆண்டு அலிப்போ என்ற சிரியாவின் நகரை ஒரு பூகம்பம் தரைமட்டமாக்கியதாக வரலாறு கூறுகின்றது. மேலும் 1999 ஆம் ஆண்டு சிரியாவில் லெஸ்மிட் என்ற நகரில் ஏற்பட்ட பூகம்பம் பல ஆயிரக்கணக்கான மக்களைக் கொன்று குவித்துள்ளது.

அரேபியத் தீபகற்பம் வடக்கு நோக்கி நகர்கிறது. ஆனால் யுரேசிய கண்டம் மேற்கு நோக்கிப் பயணிக்கிறது. இவை இரண்டும் உராய்ந்ததால்தான் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது என அமெரிக்க நாட்டில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்தின் லெமான்ட் டோகெதி என்ற பூமி கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சிரியா மற்றும் துருக்கியில் ஏற்பட்டுள்ள உயிரிழப்புக்களைப் பார்க்கும் போது, "மக்கள் அதிகம் வசிக்கும் பகுதியில் பூகம்பம் வர அதிகம் வாய்ப்புள்ள இடங்களில் இதேமாதிரியாக இட நகர்வுகள் ஏற்படுகிறதா?" என செயற்கை நுண்ணறிவு தொழில் நுட்பம் கொண்டு ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலோங்குகிறது.

இதனால் பூகம்பம் வரப்போவதைக் கணிக்க வாய்ப்புள்ளதா? எனச் சிந்திக்க வேண்டும். எப்படியாவது பூகம்பத்தை முன்னரே கணிக்க ஒரு கருவி விரைவில் கண்டறிய வேண்டியது அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் அழகும் வாள்வெட்டும்

அழகுத் தமிழ் மிளிர
ஆயகலைகளின்
தொண்மை பேசிய
இன் தமிழ் வரலாறு
கண்ட கோயில்
கற்கோயிலில்
பொற்கோயில்
கற்றறியா கயவர்
எரியூட்டினரே
கலாசாரப் படுகொலை
யாழ் பாடி பெற்ற
வாழ்வுப் பூமியிது
வாள்வெட்டால்
வாழும் தமிழின
உயிர்கள் வீழ்த்தாதீர்
வீழ்ந்த இனம் விழிப்புற
அறிவாயுகம் ஏந்தி
விழிப்புணர்வு ஓங்கட்டும்

தமிழினியன் பரந்தாமன்,
கன்னாட்டி - வவுனியா.



# விதி வந்து வேதனை செய்யும்

போட்டி பொறாமையும் பொய்யும்
கேட்டினையே தந்து வீழ்த்தும்
நாட்டமிலாதவர் கேண்மை வாழ்வில்
ஊட்டமில்லாப் பிள்ளை மேலாகும்

ஏட்டினில் கற்றவை யாவும்
ஏற்றங்கள் காணாது மாழும்
ஊற்றது அற்ற சுனை போல்
வேற்றுமை வந்து பிரிக்கும்

வாழ்வெனில் நலம் காண வேண்டும்
தாழ்வினைத் தள்ளி வைத்தேகும்
ஏழ்மையும் தான் கற்ற கல்வி
ஊழ்வினை வென்றே நிலைக்கும்

பாழ் மதி கொண்டவர் வாழ்வு
கோள்களில் சிக்கித் தவிக்கும்
ஏழ்மையும் நோயும் கெடுக்கும்
சூழ்நிலை தோன்றி அழிக்கும்

நீதியும் நேர்மையும் சேரும்
பீதியும் அச்சமும் கூடும்
ஆதியும் அந்தமும் இல்லா
விதி வந்து வேதனை செய்யும்

வளவை வளவன்.

# தூய உள்ளச் சுடர் வேண்டும்

பண்பின் சாயல் குன்றாத
பரிவு உள்ளப் பலம் வேண்டும்
இன்பம் செய்தே உயிர்க்கெல்லாம்
இரங்கும் வாழ்வுக் கலை வேண்டும்

மென்மை தவழும் வார்த்தைகளில்
மேன்மை அமைதி எதிரொலிக்கும்
தன்மை துலங்க வாழ்வெல்லாம்
தர்ம நீதி அரசன் வேண்டும்

துன்பம் செய்ய எண்ணாத
தூய உள்ளச் சுடர்வேண்டும்
அன்பின் வாசம் அகலாத
அறிவின் இதய மலர் வேண்டும்

வெண்மை உள்ளம் மானிடத்தின்
விடிவிற்காக போர் செய்யும்
வண்மை எண்ணம் அகிம்சை வழி

வழுவா மனிதத் தகை வேண்டும்
நன்மை செய்யும் மன எண்ணம்
நாளும் வளர்க்கும் அறம் வேண்டும்
வன்மை எண்ணம் தனை வென்று - புவி
வணங்கும் சாந்த குணம் வேண்டும்

ஆனையூர்க் கவிராயர்.

## மௌனத்தின் தேடல்- 597



# புதுப்புது வடிவம்

அடக்கு முறைகள்
அநீதியாகி
அப்பாவிகள்
அடக்கப்பட்டால்
போராளிகள்
புதுப்புது வடிவில்

பி.மதுஷ்சன்,
தையிட்டி.

# தொலைந்து போன இரத்தினங்கள்

ஈழத்தின் இறுதிப் போரிலே
எம் நெஞ்சத்தை மரண பயம்
ஊடறுத்த நேரத்திலே
தடுத்திடத் திராணி இன்றி
பெற்றவர்கள் கதறி அழ
சுற்றத்தார் திகைத்து நிற்க
காரணம் அறியாமல் - கைதி
எனும் பதவி ஏற்று
கொடுமையெனும் விலங்கிடப்பட்டு...

இ.இளமதி,
யா/வேம்பிடி மகளிர் உயர்தரப் பாடசாலை.

## மௌனத்தின் தேடல்- 598



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

# பொறுமையைச் சோதித்தால்

நம் உலகத்தில் இன்று
அநியாயங்களும் அநீதிகளும்
பல்கிப் பெருகின
அதனால்
அங்கே பாவச் சுமை தாங்க
முடியாமல் பூமாதேவி
கொண்ட பொறுமை எல்லை
மீறி இயற்கை
அனர்த்தங்களுக்கு இப்படி மரண
ஓலங்களும் அங்கே
வெகுவாய் மலிந்து விட்டன

சுப்பிரமணியம் ஜெயரூபன்,
பருத்தித்துறை.

# அழிக்கின்றவனே அழு

காலங்கள் கடந்து
யுகங்களாய் பொறுமையுடன்
உருவாக்கிய அற்புதமான
அழகிய உலகத்தை
அதிகார வெறியாலும்
ஆதிக்கத் திமிராலும்
உயிரின இருப்புக்கே
ஆபத்தானதாய் ஆக்கிவிட்டு
இப்போ ஏன் கதறி
அழுகின்றாய் மானிடனே?

சி.இ.அன்புதுரை,
சம்மட்டிஒலை,
மானிப்பாய்.

# அசலை விட்டு நகலை...

பயங்கரவாத வயிற்றில்
கட்டிய வெடிகுண்டு
வெடிக்கும் முன்பே
புலனாய்வுத் துறையினர்
கையும்மெய்யுமாக கண்டு
பிடித்து விட்டார்களா?
இவன் ஒரு அப்பாவி
அதோ குண்டுதாரி
அமைதியாகச் செல்கின்றான்.

பிரமன்,
கொக்குவில்.

# உடல் எனும் வாகனம்

இறையருள் கிடைக்க
எடுத்த வாகனம் இவ்வுடலதை
குறைவின்றி இயக்க உயிர்
குடியிருக்கும் வீடும் இதுவே
ஆறறிவுடன் அருமைப் பிறப்பு
மானுடமாமே மதிப்பளிப்போம்

கார்வண்ணன்,
காவலூர்.

# நிலநடுக்கம்

இது என்னுடையது
அது உன்னுடையது
என்ற மனிதனுக்குப் பாடமாய்
சில நொடிகளில்
சொல்லிச் சென்றது
அனைத்தும் மண்ணின் உடையது

பிரகவி,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 51

## புதிய பொறுப்பு

நால்வர் வந்த சமயத்திலிருந்தே அவர்களிடம் சிறிதும் நம்பிக்கை வைக்காமல், அவர்கள் மீதும் ஒரு கண் வைத்துக் கொண்டேயிருந்த அமீரின் பெருவிழிகள், அந்தத் தலைவனின் முகபாவத்தையும் அவன் கை இடையை நாடிக் குறுவாளைச் சரேலென எடுத்ததையும் கவனித்தன. அந்தத் தலைவன் அந்தக் கையைக் குறி வைக்கும் மட்டுமே பொறுத்த அமீரின் வலது கை மின்னல் வேகத்தில் தனது இடையிலிருந்து எடுத்த குறுவாளை வீசிவிடவே, குறி வைத்த கை குறி வைத்தபடியே ஆகாயத்தை நோக்கி நிற்க, அலற முயன்ற வாய் அகலத் திறந்தபடியே ஆகாயத்தை நோக்கி நிற்க, அலற முயன்ற வாய் அகலத் திறந்தபடியே நின்றுவிட, பேச்சு மூச்சில்லாமல் வேரற்ற மரம் போல் மணலில் 'தட்' என்ற சத்தத்துடன் சாய்ந்து விட்டான் அந்தப் பூர்வக்குடித் தலைவன்.

இம்மி கூட அப்படியோ இப்படியோ அகலாமல் சரியாக இதயத்தின் மத்தியில் ஒரு எலும்பையும் முறித்துக் கொண்டு ஊடுருவிப் பாய்ந்துவிட்ட அமீரின் குருவாளின் பிடி, மிகப் பயங்கரமாக மல்லாந்து கிடந்த அந்தத் தலைவனின் மார்பில் நட்டுக்கொண்டு நின்றது. அதிலிருந்து குமிழியிட்ட குருதி மணலில் ஊறிக் கொண்டிருந்தது.

மிகப் பயங்கரமாக நிகழ்ந்துவிட்ட அந்த விபரீதத்தில் இளையபல்லவன் மட்டுமல்ல, வில்வலனும் பலவர்மனுங் கூடத் திக்பிரமை யடைந்து சில விநாடிகள் என்ன செய்வதென்றறியாமல் நின்று விட்டார்கள். திக்பிரமை யடைந்த அந்த அத்தனை பேரையும் ஊடுருவியது அமீரின் ராட்சதக் குரல். "எங்கள் தலைவர் இங்கு யாரையும் கொல்ல வரவில்லை. கொலையைத் தடுக்க வந்தார். அவர் முதுகுப் புறத்தில் முதலில் கத்தி வீசப்பட்டது. இப்பொழுது அறப்போரிட்டு வில்வலனைக் கொல்ல இஷ்டப்படாமல் நிராயுத பாணியாக்கிப் பிழைக்க விட்ட அவர் மார்புக்குக் கத்தி குறி வைக்கப்பட்டது.

ஆகையினால்தான் இன்பமாக முடிய வேண்டிய இந்த விழாவில் இப்படியொரு அநாவசியக் கொலை நடந்தது. எனது கச்சையில் இன்னும் மூன்று குறுவாள்கள் இருக்கின்றன. எங்கள் தலைவருக்குத் தீங்கிழைக்க யார் அசைந்தாலும் அதோ அந்தக் கொலைஞனுக்கு ஏற்பட்ட முடிவு ஏற்படுமென்பதில் சந்தேகம் வேண்டாம்." என்று கடுமையுடனும் கரகரப்புடனும் அரம் அரத்தோடு ராவினால் ஏற்படும் ஒலியில் எழுந்த அமீரின் சொற்களைக் கேட்ட வில்வலனும் பலவர்மனும் மற்றும் பலரும் அமீர் இருந்த இடத்தை நோக்கினார்கள்.


வட்டமாக நின்ற கூட்டத்திலிருந்து இரண்டடி முன்னால் தள்ளியும் சண்டையிட்ட இருவர், பலவர்மன், முடிந்தவன் ஒருவன் போக மீதியிருந்த இரண்டு பூர்வக்குடித் தலைவர்கள், இவர்கள் அத்தனை பேரையும் கூடிய வரையில் கவனிக்கும் வகையிலும் குறுவாள்கள் செருகியிருந்த இடைக் கச்சையை வலது கையால் தடவிக் கொண்டும் நின்றிருந்தான், அமீர். அவன் இதழ்களில் குரோதக் குறுநகை மண்டிக் கிடந்தது.

பெரிய விழிகளில் பயங்கரப் பார்வையிருந்தது. அங்கிருந்த பெரும் கூட்டத்தையே நாசமாக்கி விடக்கூடிய பெரிய அரக்கன் போல் காட்சியளித்த அமீரைக் கண்டு எதற்கும் அஞ்சாத பூர்வக்குடி வீரர்களும் அச்சமடைந்தார்கள். யார் இளையபல்லவனை நோக்கி அசைந்தாலும் அங்கேயே பிணமாக்கி விடவல்ல அரக்கன் கட்டளையை மீறி அசையத் தைரியமில்லாமல் அந்தக் கூட்டம் முழுதுமே பீதியடைந்து சலனமற்று நின்றது.

திடீரென நிகழ்ந்துவிட்ட கொலையின் விளைவாகத் திகைப்பெய்திய வில்வலனை அணுக எடுத்த முயற்சியைக் கைவிட்டுச் சட்டென்று நின்ற இடத்திலேயே ஒரு விநாடி நின்றுவிட்ட இளையபல்லவன், அமீர் மற்றவர்களை எச்சரித்து முடிந்ததும் தனது கண்களால் பலவர்மனையும் மற்றவர்களையும் ஒருமுறை ஏறெடுத்து நோக்கினான்.

(தொடரும்...)

# அதிசயங்கள் விஞ்சிய பேரதிசயங்கள்



அந்த ஐம்பது ஊழியர்களின் உதவியோடு பூங்கா மேலும் 25 ஏக்கர் அளவுக்கு விரிவுப்படுத்தப்பட்டது. முறையான நுழைவுவாயில், நடைபாதைகள், கடைகள், உணவு விடுதிகள், எனப் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

1996 இல் நேக் சந்த் சொற்பொழிவாற்ற, அமெரிக்கா சென்றிருந்த போது முன்னறிவிப்பின்றி திடீரென பாதுகாப்புப் பணியாளர்கள் மற்றும் ஊழியர்களை திரும்பப் பெறப் பட்டதால், சில விஷமிகள் உள்ளே நுழைந்து பல சேதங்களை ஏற்படுத்தினர். திரும்பி இந்தியா வந்த நேக் சந்த் பூங்கா புனரமைப்புக் குழு ஒன்றை ஏற்படுத்தினார். அதன் உதவியோடு பூங்கா சீரமைக்கப்பட்டது. இன்றைக்கும் பூங்காவை தினமும் 5000 பேர் பார்வையிட்டுச் செல்கின்றனர்.

அமெரிக்காவின் வோஷிங்டன் நகர குழந்தைகள் அருங்காட்சியக இயக்குநர் 'ஆன்லெவின்' பூங்காவை பார்வைிட்டு பிரமித்துப் போய், நேக் சந்த்தை அமெரிக்கா வரும் படியும் அங்கு குழந்தைகளுக்கான பூங்கா ஒன்றை இதைப்போலவே அமைத்துத் தரும்படியும் கேட்டுக் கொண்டார்.

அவரது அழைப்பினை ஏற்று வோஷிங்டன் சென்று அதே போல சிற்பங்கள், குடிலகள் ஆகியவற்றை உருவாக்கித் தந்தார். கேரள அரசாங்கம் தங்கள் மாநிலத்தில் ஒரு பாறை பூங்காவை ஏற்படுத்தித் தரும்படி நேக் சந்த் ஐ கேட்டுக் கொண்டது. அதன்படி பாலக்காடு மாவட்டத்தில் மலம்புழாவில் 1.5 ஏக்கர் நிலப்பரப்பில் நேக் சந்த் உருவாக்கித் தந்தார்.

1983 இல் நேக் சந்த் பூங்காவை கௌரவிக்கும் வகையில் இந்திய அஞ்சல் துறை சிறப்பு தபால் தலை ஒன்றை வெளியிட்டது. 1984 ஆம் ஆண்டு நேக் சந்த்துக்கு பத்மஸ்ரீ விருதும் வழங்கப்பட்டது.

உலக சாதனை என்று பல்வேறு ஆச்சரியங்கள் மிக்க பகுதிகள் பற்றிய பல வியப்பூட்டும் செய்திகள் வந்தாலும் நேக் சந்த் இன் தனி மனித முயற்சி அசாத்தியமானது. உலக அதிசயங்களை விஞ்சிய பேரதிசயம் என்றுதான் அதனை குறிப்பிட வேண்டும்.

### தாய்மை என்னும் பேரற்புதம்

எல்லா மனித ஆக்கங்களும் எத்தனை அற்புதமாக இருந்தாலும் மனித மனம் எல்லாவற்றையும் விஞ்சிய அற்புதம் என்றால் அது மிகையில்லை.

பிரிட்டனில் பிளைமவுத் நகரில் பிறந்த லோலாவுக்கு தற்போது நான்கு வயது. அவளை பீடித்திருக்கும் நோய் மிகக் கொடூரமானது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

330

வலம்புரியின் மருத்துவச்சுபர்

# நீரிழிவு மருந்துகளை எப்போது நிறுத்திக் கொள்ள முடியும்?



நீரிழிவை குணப்படுத்த முடியுமா? அதாவது நீரிழிவு நிலைக்கு மருந்து பாவித்த ஒருவர் அந்த மருந்துகளை முற்றாக நிறுத்திக் கொள்ளக் கூடிய நிலை ஏற்படுமா? இது நடைமுறைச் சாத்தியமாகுமா? என்பன பொதுவாக பலராலும் கேட்கப்படும் ஒரு விடயமாக இருந்து வருகிறது.

நீரிழிவு நிலைக்கான மருந்துகளை சிலசமயம் நிறுத்திக் கொள்வது சாத்தியம் ஆகக் கூடிய ஒரு விடயமே. சிலருக்கு நீரிழிவுக்கான மருந்துகளை முற்றாக நிறுத்தக்கூடிய நிலை ஏற்படுகிறது. குறிப்பாக பின் வரும் நிலை உள்ளவர்களுக்கு இது சாத்தியப்படக்கூடிய சந்தர்ப்பம் இருக்கிறது.

- கர்ப்ப காலத்தில் நீரிழிவு ஏற்பட்டவர்கள் - கர்ப்ப காலம் முடிவடைந்ததும் நீரிழிவு மருந்துகளை நிறுத்திக்கொள்வது சாத்தியப்படலாம்.
- அழுத்தங்கள் தொற்றுகள் என்பவற்றுடன் நீரிழிவு கண்டறியப்பட்டவர்கள்- அந்த நிலைமைகள் கட்டுப்பாட்டிற்கு வந்த பின்னர் நீரிழிவுக்கான மருந்துகளை நிறுத்தக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு.
- அதிகரித்த உடல்நிறையுடன் ஒழுங்காக உடற்பயிற்சி உணவுக்கட்டுப்பாடு என்பவற்றில் ஈடுபடாத ஆரம்ப நிலையில் கண்டறியப்பட்ட நீரிழிவு நோயாளர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றி அமைத்து நிறை குறைந்து பொருத்தமான நடவடிக்கைகள் எடுப்பதன் மூலம் இது சாத்தியப்படலாம்.
- சில மருந்துகள் காரணமாக நீரிழிவு ஏற்பட்டவர்கள் அந்த மாத்திரைகளை நிறுத்தியவுடன் நீரிழிவு நிலை தானாக குறைவடையலாம்.
- சில ஓமோன்களின் அதிகரித்த சுரப்பால் ஏற்படும் நீரிழிவு நிலை அந்த அடிப்படை காரணம் நிவர்த்தி செய்யப்பட்டவுடன் தானாக மறைந்துவிடும்.

ஒழுங்கான உடற்பயிற்சி, ஒவ்வொரு உணவுடனும் பச்சை இலை வகைகளை சேர்த்துக் கொள்ளுதல், சரியான உடல் நிறையை பேணுதல், நீரிழிவு ஏற்படுவதற்கான அடிப்படை காரணிகளை அகற்றுதல், மன அமைதியை பேணுதல், சீனி, சர்க்கரை,பனங்கட்டி அதிகமுள்ள உணவு வகைகளைத் தவிர்த்தல் போன்ற சிறிய நடவடிக்கைகள் மூலம் நாம் பெரிய பலன்களை பெற்றுக் கொள்ளலாம்.

பொருத்தமான நடவடிக்கைகள் மூலம் மருந்துகளை குறைத்துக் கொள்வதோ நிறுத்திக் கொள்வதோ சாத்தியமாகும்.

ஒரு தடவை நீரிழிவுத்தன்மை இருப்பது கண்டறியப்பட்டவர்கள் தொடர்ந்து வரும் காலங்களில் அவர்களின் நீரிழிவு நிலை கட்டுப்பாட்டில் இருந்தாலும் 2-3 மாதங்களுக்கு ஒரு தடவையாவது குருதி குளுக்கோஸை சோதித்துப் பார்த்துக் கொள்வது அவசியமாகும். வாழ்க்கை முறையில் சிறுசிறு மாற்றங்களை செய்து பாரிய நன்மைகளை பெற்றுக்கொள்ள முயற்சி எடுப்போம்.

நீரிழிவு நிலை ஒரு பாரிய நோய் என்று எண்ணி மனக் குழப்பம் கொள்ள வேண்டிய அவசியமில்லை. இதன்னை கட்டுப்படுத்த வழங்கப்படும் மருந்துகள் பக்கவிளைவு குறைந்தவை.

எனவே மருத்துவ ஆலோசனை இன்றி இதற்கான மருந்துகளை குறைக்கவோ அல்லது நிறுத்தவோ முயற்சிஎடுப்பது பாதுகாப்பானது அல்ல. இந்த நிலையை நாம் மன ஊக்கத்துடன்வெற்றிகரமாக எதிர்கொண்டு சுகதேகியாக வாழமுடியும்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்**

முழுநீளத் திரைப்படம்

ஈழத்து கலைஞர்களின் பங்களிப்புடன் மட்டும் உருவான எமது மண்ணின் கதை.



**யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில்**

19.02.2023 (ஞாயிறு) மாலை 4.30 மணி, இரவு 7.00 மணி
20.02.2023 (திங்கள்) தொடக்கம் 24.02.2023(வெள்ளி) வரை மாலை 5.30 மணி
25.02.2023 (சனி) மாலை 4.30 மணி, இரவு 7.00 மணி
26.02.2023 (ஞாயிறு) மாலை 4.30 மணி, இரவு 7.00 மணி

தொடர்புகளுக்கு 0212222195, 0778256757

**பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (tamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஜப்பானில் கோர விபத்து இரு இலங்கையர் பலி

(ஜப்பான்)

ஜப்பானில் இடம்பெற்ற வாகன விபத்தில் இலங்கையைச் சேர்ந்த 2 இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். இந்த விபத்து கடந்த 12 ஆம் திகதி இரவு வேளையில் இடம்பெற்றுள்ளதுடன், விபத்து தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மதுபோதையில் நபரொருவர் வாகனத்தை செலுத்தியமையே விபத்திற்கான காரணம் என தெரியவந்துள்ளது.

குறித்த விபத்தில் மாத்தறையைச் சேர்ந்த 26 வயதான நிசால் சாருக்க மற்றும் சிலாபம் பகுதியைச் சேர்ந்த 27 வயதான ரஜித்த லக்மால் ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் 2 இலங்கையர்கள் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை நாட்டுக்குக் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் கொண்டு வரப்பட்டுள்ளன. (4)

# தேர்தலை தடுக்கும் நடவடிக்கைகள் ஆபத்தான முன்னுதாரணமாகும்

## சட்டத்தரணிகள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்தாது சீர்குலைக்க அரச அதிகாரிகள் மேற்கொள்ளும் முயற்சிகள் குறித்து இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் அச்சங்கத்தின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ் மற்றும் அதன் செயலாளர் சட்டத்தரணி இசுறு பாலபட்டபெந்தி ஆகியோரின் கையொப்பத்துடன் விடுக்கப்பட்டுள்ள அறிவித்தலிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் 9 ஆம் திகதி அறிவிக்கப்பட்டுள்ள 2023 உள்ளூராட்சி சபைத் தேர்தல், நாட்டின் சட்டத்திற்கமைய, மார்ச் 19 ஆம் திகதிக்கு முன்னர் நடத்தப்பட வேண்டுமெனவும் இலங்கையின் ஜனநாயகச் செயற்பாட்டின் ஒரு பகுதியான இதற்கு எதுவும் தடையாக இருக்கக்கூடாது எனவும் அதில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் அல்லது பாராளுமன்றமானது தேர்தலுக்கான வளங்களை ஒதுக்குவதை தடுத்தல் மற்றும் இலங்கை மக்கள் தங்களது பிரதிநிதிகள் மற்றும் தலைவர்களை தெரிவு செய்வதை தடுத்தல் போன்ற தேர்தலை தடுக்கும் இத்தகைய நடவடிக்கைகள் ஆபத்தான முன்னுதாரணமாக அமையும் எனவும் எச்சரித்துள்ளது.

எனவே அரசியலமைப்பு மற்றும் நாட்டின் சட்டத்திற்கு மதிப்பளித்து, உள்ளூராட்சி மன்றத் தேர்தலை திட்டமிட்டபடி நடைபெறுவதை உறுதி செய்யுமாறு, அரசாங்கம் மற்றும் அனைத்து அரச அதிகாரிகளிடமும் கோரிக்கை விடுப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (4)

# 34 வருடங்களின் பின்னர் கண்டியில் குடியரசு ஊர்வலம்

(கொழும்பு)

இலங்கையில் 34 வருடங்களுக்குப் பின்னர் ஐந்தாவது தடவையாகவும் குடியரசு ஊர்வலத்தை இன்று கண்டியில் நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

தேசிய மறுமலர்ச்சியை உருவாக்குவதற்கும் நாட்டின் மீது சர்வதேச ஈர்ப்பை பெறுவதற்கும் நாட்டின் 75 ஆவது சுதந்திர தினத்தை அர்த்தப்படுத்தும் வகையில் இது அமையும் என மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வேண்டுகோளுக்கு இணங்க மல்வத்து அஸ்கிரி மகாநாயக்கர் தலைமையில் தியவடனை நிலங்க தேலவின் ஏற்பாட்டில் இந்த ஊர்வலம் நடைபெறவுள்ளதாக அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி அலுவலகம், பௌத்த அமைச்சு மற்றும் மத்திய கலாசார நிதியம் என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன. (4)

# காணாமல்போன மூவரில் ஒருவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

கடலில் குளிக்கச்சென்று காணாமல்போன 3 மாணவர்களில் ஒரு மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காணாமல்போன இரு மாணவர்களையும் தேடும் நடவடிக்கைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாத்தறை வெல்லமடம் பகுதியில் உள்ள கடலில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை குளிக்கச்சென்ற 3 மாணவர்கள் காணாமல் போயிருந்த நிலையில் 17 வயதுடைய மாணவனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. (4)

# கட்டுநாயக்க விமான நிலையத்தை மாற்றியமைக்கவுள்ள ஜப்பான்

(கொழும்பு)

இலங்கையில் கடல் மற்றும் விமான சேவைகள் துறையில் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்கவுள்ளது.

கட்டுநாயக்க விமான நிலையத்தின் இரண்டாவது முனையத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஜப்பான் நிதியுதவி வழங்கவும் இணக்கம் தெரிவித்துள்ளது.

துறைமுக நடவடிக்கைகளுக்கு தேவையான ரேடார் கருவிகள் உள்ளிட்ட தொழில்நுட்பக் கருவிகளும் ஜப்பானில் இருந்து கிடைக்கப் பெறவுள்ளன.

துறைமுகச் செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்க இது உதவும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிஷ்கோஷி ஹிடேகிக்கும் அமைச்சருக்கும் இடையில் கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற சிநேகபூர்வ சந்திப்பில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. (4)


## வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர் மாற்றம்

**330/45, காரைநகர் வீதி, வட்டாரம் - 04**

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சுழிபுரம் உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 04, காரைநகர் வீதியிலுள்ள இல: 330/45 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **கணபதி சின்னாச்சி** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **கணபதி தர்மலிங்கம்** என்பவர் பிரசித்த நொத்தாரிசு ஆ.குமாரசுவாமி முகதாவில் நிறைவேற்றப்பட்ட 2914/08.09.1982 ஆம் இலக்க உறுதியால் சின்னப்பொடியன் கணபதியும், புன்னன் கந்தன் கைம்பெண் சிவகாமனும் ஆகியவர்களிடமிருந்து நன்கொடையாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார். குறித்த உறுதியில் அடி உறுதி பற்றிய விபரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

குறித்த **கணபதி தர்மலிங்கம்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத் தருமாறு** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **கணபதி தர்மலிங்கம்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**

(14647)


## மரண அறிவித்தல்

பிறப்பு
1947 - 10 - 14



இறப்பு
2023 - 02 - 18

### திருமதி. இந்திராணி பாலகிருஷ்ணன்

*கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இந்திராணி பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று 18.02.2023 சனிக்கிழமை அன்று காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி-சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும் பானு, பாபு, மனோஜா, ஜயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுப்பிரமணியம், பிரியா, வைகுந்தன், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிஷோர், அருண், பிரியா, அஸ்வைதா, மிதுனன், எமில், எட்ரிக், கேசவன், நவீனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், தணிகாசலம், சண்முகசோதி, சண்முகசுந்தரம், சண்முகரத்தினம், மதுரைமீனாட்சி மற்றும் மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 20.02.2023 திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

**சந்தியக்கிணறு,**
**கரணவாய் தெற்கு,**
**கரவெட்டி.**

(சி-6001)

**தகவல்**
**குடும்பத்தினர்.**
**021 205 6200**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது மகளின் பெயரை யாருக்கும் வைக்கக் கூடாது

## வடகொரிய ஜனாதிபதி உன்



(பியாங்யாங்)

உலகிலேயே அதிக கட்டுப்பாடுகள் நிறைந்த நாடு வட கொரியா. சிறிய குற்றங்களுக்கு கூட மரண தண்டனை விதிக்கப்படுகிறது. அங்கு நடக்கும் பல விடயங்கள் வெளி உலகிற்குத் தெரிவதில்லை.

செய்திகள் கூட அரசின் தணிக்கைக்கு பிறகே வெளியிடப்படும். அங்குள்ள மக்கள் பெரும்பாலும் உலக தொழில்நுட்பத்தை அறியாத மக்களாக உள்ளனர்.

இந்தநிலையில், வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன், ஜீ ஏ எனும் தனது மகளின் பெயரை வேறு யாருக்கும் வைக்கக் கூடாது என விநோத தடை விதித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் கிம் முதல் முறையாக தனது மகளை பொதுவெளியில் அறிமுகப்படுத்தினார். கிம் மகளின் பெயரை வைத்திருக்கும் பெண்கள், ஒரு வாரத்தில் பெயரை மாற்ற வேண்டும் என உத்தரவிட்டிருப்பதாகவும் இது தொடர்பாக அந்தந்த பகுதி அரசு நிர்வாகங்கள் உரிய உத்தரவுகளை பிறப்பித்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

இது தொடர்பாக உள்ளூர் தகவல்களை மேற்கோள் காட்டி ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. இந்த தகவல் வடகொரிய மக்களிடையே பீதியை ஏற்படுத்தி உள்ளது.

பெயரை மாற்ற வேண்டிய சூழலில் இலட்சக்கணக்கான வடகொரியர்கள் உள்ளனர். வடகொரிய ஜனாதிபதி கிம்மின் மூன்று குழந்தைகளில் இந்த மகளை மட்டுமே அவர் பொதுவெளியில் காட்டியிருக்கிறார்.

கிம் 2009 ஆம் ஆண்டு திருமணம் செய்தார் என்றும் அவருக்கு இரண்டு மகள்கள் மற்றும் ஒரு மகன் உள்ளனர் என்றும் தென் கொரிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (4)

# சட்டவிரோத பயணம்; பலர் உயிரை விட்டனர்




(கபர்டினோ)

பல்கேரியாவில் கைவிடப்பட்ட டிரக்கில் ஒரு குழந்தை உட்பட 18 பேர் சடலமாக கண்டெடுக்கப்பட்டுள்ளதோடு, ஐந்து குழந்தைகள் உட்பட 34 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்டவர்கள் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களில் சிலரின் நிலைமை கவலைக்கிடமாக இருப்பதாகவும் சுகாதார அமைச்சர் அசென் மெட்ஸிடிவ் கூறினார்

டிரக்கில் இருந்தவர்கள் குளிராகவும் ஈரமாகவும் ஆக்ஸிஜன் இல்லாமல் மற்றும் பல நாட்களாக சாப்பிடாமல் இருந்ததாகவும் அவர் கூறினார்.

டிரக் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர் குழுவை ஏற்றிச் சென்றதாகத் தெரிகிறது. இந்தச் சம்பவம் தொடர்பில், பல்கேரிய பொலிஸார் நான்கு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நான்கு பேரில் ஒருவர் ஏற்கனவே மனிதக் கடத்தல் குற்றத்திற்காக தண்டனை பெற்றவர் என்று மூத்த பொலிஸ் துறை அதிகாரி அட்டானாஸ் இல் கோவ் தெரிவித்தார். (4)

# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு ஆறு பேர் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவைச் சேர்ந்த நபர் ஒருவர், தனது முன்னாள் மனைவி உட்பட 6 பேரை சுட்டுக் கொன்றுள்ளார்.

மிசிசிப்பி மாநிலத்தின் அர்கபுட்லா நகரின் வெவ்வேறு இடங்களில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடத்திய 52 வயதான நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எரிபொருள் நிலையமொன்றில் ஒருவரை சுட்டுக் கொன்ற இந்நபர், பின்னர் அருகிலுள்ள தனது வீடொன்றுக்குச் சென்று தனது முன் னாள் மனைவியை கொன்றுள்ளார்.

அதன்பின் தனது வீட்டுக்குச் சென்று வளர்ப்புத் தந்தையை சுட்டுக் கொன்றார்.

அதன் பின்னர் வேறு மூவரையும் அவர் சுட்டுக் கொன்றார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (4)

# டைனோசரின் கால்தடம் பிரித்தானியாவில் கண்டுபிடிப்பு



(லண்டன்)

பிரித்தானியாவில் உள்ள யார்க்ஷைர் மாகாணத்தில் பிரம்மாண்ட டைனோசர் கால் தடம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த கால் தடம் 3.3 அடி நீளம் இருப்பதாகவும் இது 16 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்க கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்குள்ள கடற்கரைப் பகுதியில் பாறைத் துண்டின் மீது டைனோசரின் கால் தடம் இருப்பதை ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பில் பேசிய தொல்லியல் ஆய்வாளர்கள், கண்டெடுக்கப்பட்டது டைனோசரின் இடது கால் தடம் என்றும் அதன் அளவு 3.3 அடி நீளம் இருப்பதாகவும் இந்த உயிரினம் 16 கோடி ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருக்கக் கூடும் என்றும் தெரிவித்துள்ளனர்.

மேலும், கண்டெடுக்கப்பட்ட டைனோசரின் கால் தடம் அருங்காட்சியகத்துக்கு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# லிபியாவில் படகு கவிழ்ந்ததில் 73 அகதிகள் நீரில் மூழ்கிப் பலி

(ரிபோலி)

லிபியாவில் இருந்து ஐரோப்பா நாடுகளுக்கு கடல் வழியே சென்ற படகு கவிழ்ந்ததில் 73 அகதிகள் பலியாகி உள்ளனர் என ஐ.நா அமைப்பு உறுதி செய்துள்ளது.

ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியே பயணம் மேற்கொள்கின்றனர். இதற்கு லிபியாவை ஒரு மையப் புள்ளியாக வைத்துள்ளனர்.

லிபியா நாட்டில் உள்நாட்டு குழப்பம், கிளர்ச்சியாளர்கள் வன்முறை ஆகியவற்றால் ஸ்திரத்தன்மையற்ற அரசாட்சி காணப்படுகிறது.

எண்ணெய் வளமிக்க அந்நாட்டில் இருந்தும் மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர்.

இதற்காக அவர்கள் மத்திய தரைக்கடல் வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல் மற்றும் படகுகள் வழியே அகதிகளாக தப்பிச் செல்கின்றனர்.

ஆபத்து நிறைந்த இந்த பயணத்தின்போது, விபத்துக்களும் ஏற்படுகின்றன. எனினும், வழியின்றி இதுபோன்ற வெளிநாட்டுப் பயணத்திற்கு பொதுமக்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றனர்.

இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டு சென்ற படகு ஒன்று லிபிய கடற்கரைப் பகுதியில் கவிழ்ந்துள்ளது.

இந்நிலையில், ஐ.நாவுக்கான புலம்பெயர்வோர் அமைப்பு நேற்று வெளியிட்டு உள்ள செய்தியில், இதுவரை 11 உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 7 அகதிகள் லிபியா கடற்கரை பகுதிகளில் நீந்தி கரை சேர்ந்து உள்ளனர் என தெரிவித்து உள்ளது. காணாமல் போன 73 அகதிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்திருக்கக் கூடும் என தெரிவித்துள்ளது. (4)

## துருக்கி-சிரியா நிலநடுக்கம்

# 11 நாட்களின் பின்னர் 3 பேர் உயிருடன் மீட்பு

(அங்காரா)



துருக்கி மற்றும் சிரியாவில் கடந்த 6 ஆம் திகதி அதிகாலையில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கம் பேரழிவை ஏற்படுத்தி உள்ளது. ஆயிரக்கணக்கான கட்டடங்கள் இடிந்து விழுந்து தரைமட்டமாகி உள்ளன. பலியானோர் எண்ணிக்கை 42 ஆயிரத்தை தாண்டியது. மேலும் பலர் இடிபாடுகளில் சிக்கியிருப்பதால் உயிரிழப்பு மேலும் உயரும் என அஞ்சப்படுகிறது. மீட்புப் பணிகள் முழு வீச்சில் நடைபெறும் நிலையில், பலர் உயிருடன் மீட்கப்பட்டு வருகிறார்கள். அந்த வகையில் நிலநடுக்கம் ஏற்பட்டு 11 நாட்களுக்குப் பிறகு துருக்கியில் நேற்று முன்தினம் சிறுவன் உள்ளிட்ட 3 பேர் மீட்கப்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப ஒளியால் துன்பங்கள் நீங்கி வளமான இலங்கையின் கதவுகள் திறக்கப்பட வேண்டும்

## சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

நமது உறவுகளை வலுப்படுத்த முடிவு செய்தால், நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் கடந்து, அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாட்டை நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது மஹா சிவராத்திரி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அதில் மேலும் குறிப்பிடுகையில்,

மஹா சிவராத்திரி விரதத்தை பக்தியோடு அனுஷ்டிக்கும் அனைத்து இந்து மக்களின் வேண்டுதல்களும் நிறைவேற பிரார்த்திக்கிறேன்.

உலகெங்கிலும் உள்ள இந்துகள் சிவராத்திரி நாளில் அனைத்து உயிர்களையும் துன்பத்திலிருந்து காப்பாற்றும் நோக்கத்துடன் சிவபெருமானை வழிபடுகின்றனர்.

"இருள் நீங்கி ஒளி பரவட்டும்" என்ற பிரார்த்தனையுடன் கண் விழித்து இரவு முழுவதும் பிரார்த்தனை செய்கின்றனர். இது ஒருவருக்கொருவர் அமைதி, நல்லிணக்கம் மற்றும் சமத்துவத்தை வளர்க்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

பரஸ்பர மரியாதை மற்றும் ஒருவருக்கொருவர் நம்பிக்கை இல்லாமல் ஒரு நாடாக நாம் முன்னேறமுடியாது. சிவபெருமானின் இந்த பிரகாசமான இரவில் நாம், நமது உறவுகளை வலுப்படுத்த முடிவு செய்தால், நாடு எதிர்கொள்ளும் அனைத்து சவால்களையும் கடந்து, அமைதி, நல்லிணக்கம் மற்றும் செழிப்பு நிறைந்த நாட்டை நம்மால் நிச்சயமாக கட்டியெழுப்ப முடியும்.

மஹா சிவராத்திரியில் ஏற்றப்படும் தீப ஒளியால் அனைத்து துன்பங்களும் நீங்கி, வளமான இலங்கையின் கதவுகள் திறக்கப்பட வேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன் என குறிப்பிட்டார். (4)

# ராஜபக்ஷ நிழல் அரசாங்கத்திற்கும் உடன் முடிவு கட்ட வேண்டும்

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்

ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் ஒரு ராஜபக்ச நிழல் அரசு உருவாகியுள்ளது. இதற்கும் மக்கள் உடனடியாக முடிவு கட்டவேண்டும் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

ஹரிஸ்பத்துவ தொகுதி அக்குரணை பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டு மக்களின் மாபெரும் போராட்டத்தாலேயே நாட்டை அழித்த ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர் உள்ளிட்ட ராஜபக்ச குழுவினர் வீட்டுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

ஆனால் இன்றும் நாட்டில் மாற்றமேதும் ஏற்படாதது ராஜபக்சக்களைப் பாதுகாக்கும் ஒரு ராஜபக்ச நிழல் அரசு உருவாகியுள்ளதாலேயே ராஜபக்சக்களை ஆட்சிக்குக் கொண்டுவர நாம் ஒரு போதும் செயற்படவில்லை. இவர்களை ஆட்சிக்குக் கொண்டுவர வேண்டும் என்று வீடு வீடாகச் சென்று பிரசாரம் செய்த சிலர், அவர்களும் ஒன்றே இவர்களும் ஒன்றே எனச்சொல்லி, தாம் நல்ல பிள்ளைகள் போல் காட்டிக் கொள்ள செயற்படுகின்றனர் என தெரிவித்தார். (4)

# விசேட சோதனை இருவர் கைது

விற்பனைக்காக தயார் படுத்தப்பட்ட 11 கிலோ 100 கிராம் நிறையுடைய 42 போலி தங்க பிஸ்கட்களுடன் சந்தேகநபர்கள் இருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் மாலை சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி கனகபுரம் பகுதியில் இந்த சோதனை நடத்தப்பட்டுள்ளது.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட உபகரணங்களையும் பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர். (4)

# மானிப்பாய் தனியார் பேருந்து மீது தாக்குதல்

யாழில் இருந்து சங்கானை ஊடாக மாதகலிற்கு பயணிகளை ஏற்றிச் சென்ற தனியார் பேருந்து மீது நேற்று மதியம் தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

சண்டிலிப்பாயைச் சேர்ந்த இருவர் இவ்வாறு பேருந்து மீது மேற்கொண்ட தாக்குதலில் பேருந்தின் பின்பக்கம் சேதமடைந்துள்ளது.

இது குறித்து மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் பொலிஸார் சூத்திரதாரிகளை கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4,104)

# பேராசிரியர் விக்னேஸ்வரனின் இறுதிக் கிரியை செவ்வாயன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணிதத் துறைப் பேராசிரியரும், முன்னாள் துணை வேந்தருமான பேராசிரியர் இரட்ணம் விக்னேஸ்வரனின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கோண்டாவில் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரது பூதவுடல் செவ்வாய்க்கிழமை காலை 7:30 மணிக்கு அங்கிருந்து எடுத்துச் செல்லப்பட்டு, பல்கலைக்கழகத்தில் அஞ்சலிக்கு வைக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கத்தில் நடைபெறவுள்ள அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து, முற்பகல் 9:30 மணிக்கு பூதவுடல் மீண்டும் அவரது இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கு முற்பகல் 10:30 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடாத்தப்பட்ட பின்னர் தகனக் கிரியைகளுக்காக இணுவில் கிழக்கு, காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4,104)

# ஸ்ரீமுதலி அம்பாள் ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புலோலி கிழக்கு சந்தாதோட்டம் அருள்மிகு ஸ்ரீ முதலி (மனோன்மணி) அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று மார்ச் மாதம் 5 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 6 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் 7 ஆம் திகதி இரவு பூங்காவன உற்சவத்துடன் நிறைவடையும்.

மஹோற்சவ நாட்களில் தினமும் 7.30 மணிக்கு மஹோற்சவ கால பிரதம குரு "சாமஸ்ரீ தேசகீர்த்தி", சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீ காந்தக் குருக்களின் சமய சொற்பொழிவும் இடம்பெறும் என மேற்படி ஆலய தரும பரிபாலன சபை செயலாளர் இ.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (4)

இராஜதந்திரம் என்பது கையில் கல் கிடைக்கும் வரை நாயுடன் பேச்சுக் கொடுப்பது போன்றது.
~ யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# பிக்குகளின் சபதம் நாட்டை அழிப்பதற்கானது

விதியை வெல்வேன் என்று யார் கூறினாலும் அதுவும் விதிதான் என்றகிறார் கவியரசு கண்ணதாசன்.

ஆக, அழிவதுதான் விதி என்றால், அதனை நிறைவேற்றிக் கொள்ள விதி தானே விதி சமைக்கும்.

உண்மை. கௌரவர் சேனை அழிவது விதியானபோது, பாண்டவர்களுக்கு ஐந்து வீடு கொடுப்பதற்கும் துரியோதனன் இணங்க மறுத்தான்.

அதன் விளைவு குருசேத்திரப் போரில் கௌரவர்கள் மாண்டு போயினர்.

இதுபோல இராவண சேனை அழிந்தாக வேண்டும் என்பது எழுதப்பட்ட விதியாக இருந்தபோது, இராமபிரானை சூர்ப்பனகை சந்திப்பது தவிர்க்க முடியாததாயிற்று.

இதுபோலவே எல்லாமும். அந்த வகையில், இலங்கையில் மக்கள் நிம்மதியாக வாழ முடியாது என்பது அதன் தலைவிதியான போது, பேரினவாதிகள் இலங்கையைத் தமக்கென உரிமை கொண்டாடினர்.

இலங்கை, பௌத்த சிங்கள நாடு என மார்தட்டினர். அதன் காரணமாக, இந்த நாடு மிகப்பெரும் யுத்தப் பேரழிவைச் சந்திக்க வேண்டியதாயிற்று.

யுத்தத்தை நடத்தியவர்களை ஆட்சிக் கட்டிலில் இருந்து இறக்குவதற்கு ஒருபோதும் இல்லாதளவில், சிங்கள மக்கள் பேரெழுச்சி கொண்டனர்.

அதுதவிர, யுத்தத்தை நடத்திச் செல்வத்தை அழித்துவிட, இப்போது அருமந்த இலங்காபுரி கந்தறுந்து போயுள்ளது.

இந்தநிலையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வைக் கண்டால், உலக நாடுகளின் உதவி கிடைக்க – அதிலிருந்து நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கலாம் என்றால், அதனை எப்பாடுபட்டும் தடுத்துவிட வேண்டுமென பௌத்த பிக்குகள் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

ஆம், கௌதம புத்தபிரானின் போதனைகளைப் பின்பற்றி எந்த உயிர்க்கும் கெடுதி செய்யாத உயர்ந்த அறத்தைப் பின்பற்ற வேண்டிய பௌத்த பிக்குகள் மதம் கொண்ட யானைகள் போல நடந்து கொள்கின்றனர்.

அதில் ஒன்றுதான் எப்பாடுபட்டும் 13ஆவது அரசியலமைப்பை இல்லாதொழிப்போம் என்ற அவர்களின் சபதமாகும்.

பரவாயில்லை 13ஆவது அரசியலமைப்புச் சீர்திருத்தம் அமுலாகித் தமிழ் மக்களுக்கு எதுவும் தரப்போவதில்லை.

ஆனால் 13ஐ அமுல்படுத்தாமல் விட்டால், அதற்காக வருந்தப் போபவர்கள் சிங்களத் தரப்பினர் என்பதுதான் உண்மை.

இருந்தும் அந்த உண்மையை உணராத புத்த பிக்குகள், அரசியல் தீர்வாக முன்மொழியப்படும் 13ஐ இல்லாது செய்வோம் எனச் சபதம் செய்கின்றனர் எனில்,

இலங்கை அழிவது விதியாயிற்றோ அல்லது தமிழ் மக்களுக்குத் தனித் தேசம் கிடைப்பது விதியாயிற்றோ என்பதுதான் தெரியவில்லை.

எது எவ்வாறாயினும் பௌத்த பிக்குகளின் மேற்போந்த சபதம் அழிவுக்கேயன்றி, வேறு எதற்குமல்ல என்பதுதான் சர்வ உண்மை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு அம்பகாமம் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவ சேவை வேண்டும்

## அப்பகுதி மக்கள் வேண்டுகோள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு அம்பகாமம் கிராமத்திற்கு நடமாடும் மருத்துவ சேவையினை நடத்தும் படி கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்பகாமம், புலிமச்சிநாத குளம் ஆகிய கிராமங்களில் 130 வரையான குடும்பங்கள் வாழ்கின்ற போதிலும் 15 கிலோ மீற்றர் தூரத்திலேயே மாங்குளம் ஆதார மருத்துவமனை காணப்படுகின்றது.

இக்கிராமத்திற்கு பேருந்து சேவைகள் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாக இக் கிராமத்தில் இருந்து சுயமாகவே மக்கள் மருத்துவமனைக்கு செல்ல வேண்டிய நிலையில் வாரத்தில் ஒரு தடவை அம்பகாமம், புலிமச்சிநாதகுளம் ஆகிய கிராமங்களுக்கு நடமாடும் மத்திய சேவையினை வழங்குவதற்கு முல்லைத்தீவு பிராந்திய சுகாதார பணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தற்போது தமது கிராமங்களில் மகப்பேற்றிற்குரிய பெண்கள், முதியவர்கள் நோய்கள் ஏற்படுகின்ற போது இரவு வேளைகளில் போக்குவரத்து நெருக்கடிக்கு மத்தியில் மாங்குளம் மருத்துவமனைக்கு செல்வதாகவும் குறிப்பாக காட்டு விலங்குகளின் தாக்குதல்களின் போது உயிராபத்தான நிலையில் பல தடவைகள் மாங்குளம் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள நிலையில் நடமாடும் மருத்துவ சேவை இக்கிராமங்களுக்கு அவசியமாகின்றது எனவும் மக்களினால் தெரிவிக்கப்படுகின்றது. (4-350)

# பாலைதீவு அந்தோனியார் ஆலய திருவிழா கலந்துரையாடல்

(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பாலை தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் இவ்வருடத்திற்கான திருநாள் திருப்பலியை முன்னெடுக்க அனைத்து துறையினரும் ஒத்துழைப்புக்களை வழங்கியதுவ வேண்டும் என மேலதிக அரச அதிபர் சிறிமோகனன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரி பாலை தீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருநாள் திருப்பலி எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இது தொடர்பான கலந்துரையாடல் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் மேலதிக அரச அதிபர் சிறிமோகனன் தலைமையில் நடைபெற்றது.

இதில் கிளிநொச்சி மற்றும் பூநகரி பங்குத் தந்தையர்கள், பூநகரி பிரதேச செயலாளர் அகிலன், பூநகரி பிரதேச சபையின் செயலாளர் இ .தயாபரன் , பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள், கடற்படையினர், இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டதுடன் பக்தர்களுக்கான போக்குவரத்து வசதிகள், மருத்துவ வசதி மற்றும் இதர வசதிகள் தொடர்பிலும் கலந்தாலோசிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (4-315)

# மாட்டுக் கன்றின் தலையை வெட்டி வீசிய விசமிகள்

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினமான நேற்று மாட்டுக்கன்று ஒன்றினை வெட்டி அதன் தலையையும் இதர மாமிச கழிவுகளையும் வீதியில் விஷமிகள் வீசி சென்றுள்ளனர்.

கோண்டாவில், முத்தட்டுமட வீதியில் காலை மாமிச கழிவுகள் வீசப்பட்டு காணப்பட்டமையை அடுத்து, அப்பகுதி மக்களால் கோப்பாய் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அதனை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன் , நல்லூர் பிரதேச சபை கழிவகற்றும் வாகனத்தின் ஊடாக கழிவுகளை அகற்றினர்.

சிவராத்திரி விரத நாள் அன்று மாட்டு கன்றினை வெட்டி அதன் தலையை வீசி சென்று இருந்தமை அப்பகுதி மக்களிடம் கவலையை ஏற்படுத்தியுள்ளது.


விஷமிகளின் இந்த செயற்பாட்டிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொலிஸாரிடம் கோரியுள்ளனர். (4)



வரலாற்றுச் சிறப்பு மிக்க பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான யாழ்.கீரிமலை நகுலேஸ்வர், நகுலாம்பிகை தேவஸ்தானத்தின் முத்தேர் இரதோற்சவம் நேற்று மிகச் சிறப்பாக இடம்பெற்றது. (படம்:-கஜிந்தன்)

# மருதங்கேணி பாலத்தடியில் திடீரென தோன்றிய சிவலிங்கம்

(கரணவாய்)



மருதங்கேணி பாலத்துக்கு அருகாமையில் சிவராத்திரி தினமான நேற்று சனிக்கிழமை அதிகாலை சிவலிங்கம் ஒன்று வைக்கப்பட்டிருப்பதை அவதானித்து வீதியால் பயணிக்கும் பொதுமக்கள் வழிபட்டு வருகின்றார்கள்.

மருதங்கேணி- புதுக்காட்டு வீதியில் உள்ள முடங்குதீவு பகுதியில் மேற்படி சிவலிங்கம் ஒன்று இரவு வைக்கப்பட்டுள்ளது.

தகவல் பரவியதை அடுத்து பொதுமக்கள் சென்று வழிபட்டு வருகின்றனர்.

சிவராத்திரி தினம் குறித்து சிவலிங்கம் வைக்கப்பட்டு இருப்பது அப்பகுதி மக்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. (4-60)

# வடபகுதி கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்க அறிஞர் குழாம்

(அராலி)

வட பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கடற்றொழிலாளர் கட்டமைப்பை வலுப்படுத்தவும் அறிஞர்கள் குழாமொன்று உருவாக்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாச தலைவர் அ.அன்னராசா தெரிவித்தார்.

யாழில் இடம்பெற்ற கலந்துரையாடலிலே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து மேலும் அவர் தெரிவிக்கையில்,

வடக்கில் கடற்றொழில் சமூகங்களை சேர்ந்தவர்களும் சமாசங்களை சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் ஈடுபட்டு குறித்த குழுவை உருவாக்கியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆலோசனை வழங்குவதற்கான அறிஞர் குழுவில் அகிலன் கதிர்காமர், சூசை ஆனந்தன், செல்வின் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர். குறித்த மூவருக்கு அப்பால் கடற்றொழிலாளர் களுக்கு ஆலோசனை வழங்க ஏனைய அறிஞர்கள் முன்வரவேண்டும் எனத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற குறித்த கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம் பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழில் அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (4-104)

# தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்வு எதிர்வரும் 21 ஆம் திகதி மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த தேசிய நிகழ்வு, அதன் நோக்கத்தை நிறைவு செய்யும் வகையில் அமைந்திட சகலரும் ஒத்துழைப்புக்கள் வழங்கி தங்கள் வாழிடங்கள், சமய நிறுவனங்கள், அரச, தனியார் நிறுவனங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் மயானங்களின் சுற்றுச் சூழலை துப்புரவாக பேணுங்கள்.

இம்முறை டெங்கு நுளம்பு பெருக்கத்திற்கு சாதகமான நிலைமைகள் காணப்படும் அனைத்து அரச, தனியார் நிறுவனங்கள் வீடுகள், மண்டபங்கள், ஆலயங்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே அனைவரும் தங்கள் சூழலை டெங்கு பெருகாத வாறு சுத்தமாக வைத்திருப்பதுடன் அன்றைய தினம் தங்கள் வீடுகளில் தரித்திருந்து களத்தரிசிப்பிற்கு வருபவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாநகர சபை பிரதம மருத்துவ அதிகாரி அறிவுறுத்தியுள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 280 | 280 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 240 | 200 | 300 |
| தக்காளி | 260 | 200 | 180 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 180 | 190 | 240 |
| கோவா | 80 | 70 | 80 | 100 |
| கரட் | 160 | 200 | 200 | 250 |
| பூசணி | 80 | 80 | 60 | 80 |
| புடோல் | 180 | 160 | 150 | 200 |
| வாழைக்காய் | 160 | 170 | 120 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 170 | 150 | 200 |
| பாகற்காய் | 320 | 500 | 400 | 600 |
| வெண்டக்காய் | 450 | 300 | 280 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 80 | 160 |
| பயற்றங்காய் | 600 | 600 | 400 | 600 |
| லீக்ஸ் | 220 | 260 | 250 | 300 |
| பீற்றூட் | 180 | 150 | 140 | 200 |
| கறிமிளகாய் | 750 | 500 | 400 | 500 |
| முருங்கைக்காய் | 1500 | 1800 | 1500 | 2000 |
| போஞ்சி | 350 | 300 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 250 | 150 | 240 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 140 | 100 | 150 |
| தேசிக்காய் | 240 | 150 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80 | 80-120 |
| இராசவள்ளி | 300 | 250 | 300 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 90 | 140 | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 140 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 120 | 120 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

மடைந்துள்ளதுடன், அவரது தாயார் மற்றும் கார்ச் சாரதி ஆகிய இருவரும் படுகாயமடைந்துள்ளனர்.

மரணமடைந்த சிறுமியின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், படுகாயமடைந்தவர்கள் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் விபத்து குறித்து பூனாவ பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4,250)

## தலைவர்...

வைத்தியர் சந்திரசேகரன், இவர் சென்னை தடயவியல் நிறுவனத்தின் இயக்குநராக இருந்தவர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் உடலை நாங்கள் கண்டெடுத்தோம், என்று 11 மணிக்கு அறிவிக்கின்றார்கள். 11.30 மணிக்கு டி.என்.ஏ சோதனை செய்து விட்டோம். அது பிரபாகரனின் உடல் தான் என்று அறிவிக்கிறார்கள்.

அப்போது, வைத்தியர் சந்திரசேகர் பத்திரிகைகளுக்கு பேட்டி கொடுக்கையில், டி.என்.ஏ சோதனை என்பது ஒரு மணித்தியாலத்தில் செய்யக்கூடியது அல்ல. அதனை செய்வதற்கு நான்கு நாட்கள் ஆகும். அந்தப் பரிசோதனைக்கு, சம்பந்தப்பட்ட நபரின் குடும்பத்தினரின் இரத்தம் தேவைப்பட்டிருக்கும் என அறிவித்திருந்தார்.

இதைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும். இலங்கை இராணுவம், அரசாங்கம் பொய்கூறுகிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகிறது.

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜிவ் காந்தியின் கொலை வழக்கில், முதல் குற்றவாளியாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனின் பெயரை சேர்த்திருக்கின்றார்கள்.

ஒரு கொலை வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவர் இறந்துவிட்டால் மரணச் சான்றிதழ் கொடுத்து அவரின் பெயரை நீக்கிவிடுவார்கள்.

இலங்கை அரசு பிரபாகரனை கொன்று விட்டோம், அவரது உடலை காட்டி விட்டோம் என்று பகிரங்கமாக அறிவித்தார்கள். ஏன் மரணச் சான்றிதழ் கொடுக்கவில்லை, ஏன் குற்றப் பத்திரிகையில் அவரது பெயர் இருக்கின்றது.

இந்திய அரசாங்கம் அமைத்த விசாரணை குழு இன்னமும் அதனை விசாரித்துக் கொண்டிருக்கின்றது. இதெல்லாம் என்ன நாடகம். அந்த வகையில், இலங்கை அரசும் பிரபாகரன் இறந்ததை நம்பவில்லை, இந்திய அரசும் பிரபாகரன் இறந்ததை நம்பவில்லை என்றுதான் தோன்றுகின்றது.

அதற்காகத்தான் அவர் இறந்துவிட்டது போன்று பொய் கூறுகிறார்கள். அப்படித்தானே இருக்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (4)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 18/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1490
வெற்றி இலக்கங்கள்
கடகம் 0 3 9 9 7 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.02.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1065
I 01 49 79 80
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத
திகதி 2023.02.18
சீட்டிழுப்பு இலக்கம் 3277
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்
Q 51 57 69 80
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 18/02/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1383
C 23 19 23 40 47

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.02.18
சீட்டிழுப்பு இலக்கம் 344
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 12 22 40 47 கும்பம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/02/18
சீட்டிழுப்பு இலக்கம் 5035
L 4 6 7 7 5 4
தேசிய லொத்தர் சபை

## சாவகச்சேரியில்...

யைச் சேர்ந்த 74 வயதான சு.சுந்தரலிங்கம் என்ற முதியவரே இவ்வாறு அவரது வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முதியவரது சடலம் மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-30)

## உறுப்பினர்களின்...

வதன் ஊடாக நாட்டிற்கு ஏற்படக்கூடிய நெருக்கடிகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாக குழு உறுப்பினர்களுடன் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

இதன்போது அவர் தொடர்ந்தும் கூறுகையில்,

தேர்தல் நடவடிக்கைகளுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தான் தொடர்புபடப் போவதில்லை. ஆனால் நாட்டிற்கான திட்டங்களின்போது பாராளுமன்றத்தில் உள்ள அனைத்து தரப்புகளுடனும் ஒன்றிணைந்து செயற்பட நான் எப்போதும் தயாராகவே உள்ளேன்.

நாட்டின் பொருளாதார நிலைமைகளை சீர்செய்யவும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கையை நான் ஏற்கெனவே கூறியதுபோன்று குறைத்து தேர்தல் ஒன்றுக்கு செல்ல அனைத்து தரப்புகளுக்கும் அழைப்பு விடுக்கிறேன் என்றார். (4)

## தேர்தலை ஒரு...

களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயக முறைப்படி தேர்தல் இடம் பெறுவதோடு மக்களின் வாக்குரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

ஆனால் தற்போது நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியை சரி செய்யாமல் தேர்தல் நடத்துவது இருக்கின்ற சொற்ப அமைதி நிலைமையும் கேள்விக்குறியாக்குவதாக அமைந்துவிடும்.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் நடத்துவதற்கு பல மில்லியன் ரூபாய்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்ட நிலையில் தற்போதைய நாட்டின் பொருளாதார வீழ்ச்சி நிலைமையில் இதனை எவ்வாறு நடத்துவது என அரசாங்கத்திற்கு சங்கடம் இருக்கிறது என அவர் தெரிவித்தார். (4-104)

## சீனாவின்...

கைக்கான நிதியுதவியை வழங்குவதற்காக சர்வதேச நாணய நிதியம், அதன் கடன் வழங்குநர்களிடம் இருந்து நிதி உத்தரவாதத்தை எதிர்பார்த்திருந்தது.

இருப்பினும் 10 வருடங்களுக்கு கடன் மறுசீரமைப்பு என்ற கொள்கைக்கு இந்தியா மற்றும் ஜப்பான் இணங்கிய நிலையில் சீனா இரண்டு வருட கடன் ரத்துக்கு அப்பால் செல்ல மறுத்தது.

எதிர் வரும் மார்ச் மாதத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியுதவியை எதிர்பார்க்கலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த வாரம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## அத்தி...

இவ்வாறு அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (4)

## இலங்...

தடைவைகள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் ஜேர்மனிக்கும் வாக்குறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (4)

## திட்டமிடப்பட்ட...

தாபனத்தினால் போதுமானளவு எரிபொருள் வழங்கப்படாமை, பொலிஸ் திணைக்களத்தினால் அரச அச்சகத்துக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படாமை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பிலும் நீதிமன்றத்துக்கு அறிவிக்கவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தலை திட்டமிட்ட தினத்தில் நடத்துவதாக தேர்தல்கள் ஆணைக்குழு உயர் நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ள போதிலும், அதனை நிறைவேற்ற முடியாதவாறு ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பில் தெளிவுபடுத்தப்படவுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

## திருக்கேதீஸ்வர...

2023ஆம் ஆண்டுக்கான மஹா சிவராத்திரி நிகழ்வானது நேற்று சனிக்கிழமை மன்னாரில் பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மற்றும் தென்பகுதிகளில் இருந்து ஐந்து லட்சத்துக்கும் அதிகமான மக்கள் வருகை தந்ததோடு வெளிநாடுகளிலும் இருந்து விசேடமாக பக்தர்கள் வருகை தந்திருந்தனர். (4,285)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2010
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.02.18
தினம் சனிக்கிழமை
V 02 08 24 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,791,100/-
DLB www.dlb.lk

சனிதா Shanida
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.02.18
சீட்டிழுப்பு இல : 4171
வர்ணம் : இளம் பச்சை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,361,640/-
வெற்றி இலக்கங்கள்
47 50 51 73 P
DLB www.dlb.lk

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,000,000/-
திகதி 2023-02-18
வெற்றி வாரம் 3722
வர்ணம் இள நீலம்
வெற்றி இலக்கங்கள் 06 16 19 32 சிம்மம்
1740
368
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,889,060/-
DLB DEVELOPMENT LOTTERIES

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
K 09 04 17 21 48
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1186
சிவப்பு
2023.02.18 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 306,977,096.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 572
திகதி 2023-02-18
வர்ணம் செம்மஞ்சள்
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 53 60 66
விதி எண் 09
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 17,222,940/-
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1836
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி : 2023.02.18
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,491,400/-
வெற்றி இலக்கங்கள்
43 48 50 77 O
DLB www.dlb.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவிலுள்ள பண்ணையில் தங்கி வேலை செய்யும் ஆட்கள் தேவை. கால்நடைகள் பராமரிப்பவர், விவசாயம், சமையல் வேலைகள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு.

உணவும் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

சம்பளம் 36,000 ரூபாயிலிருந்து 45,000 ரூபாய் வரை.

அனுபவத்திற்கு ஏற்றமாதிரியும் ஆற்றலையும் உறுதிப் படுத்துவதன் மூலம் அதிகரித்துக்கொடுக்கப்படும்.

தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக்கு உள்ளவர்கள், வயது 18 - 45 வரை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு**
முகாமையாளர் :
**077 429 2500**
தங்கராணி பண்ணை
**021 229 1578 / 076 257 4690**
(C-5986)

## உடனடி வேலை வாய்ப்பு

**நிர்வாக உத்தியோகத்தர்**



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மாவிட்டபுரம்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
(C-6004)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam / IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.
**T.P : 077 780 3970, 074 007 1970**
(14288)

## மணமகன் தேவை

1972 இல் அஸ்வினி நட்சத்திரத்தில் பிறந்த ஒரு வருடத்தில் விவாகரத்துப் பெற்ற அழகிய மகளுக்கு 50 - 54 வயதிற்குள் ஏற்ற துணையை தேடுகிறோம். தரகர் வேண்டாம். நேரடியாக தொடர்பு கொள்ளவும்
(14631)
**077 842 0952**

## தரம் 10,11 வணிகக்கல்வியும் கணக்கீடும்

⇨ இம்முறை O/L பரீட்சை எடுப்பவர்களிற்கு கணக்கியல் பகுதி மீள கற்பிக்கப்படும்.
⇨ 10 வருட கடந்தகால வினாக்கள் ஆராயப்படும்.
⇨ நேரடி மற்றும் Zoom வகுப்புக்கள்
⇨ தனியார் கல்வி நிலையங்களும் தொடர்புகொள்ளலாம்.

By : **M.Dushiyankan**
BBM (2nd class upper) MSW (R)
(14632)
**077 919 7908**

## சூப்பர்மாக்கட் வேலைவாய்ப்பு

**இடம் : உரும்பிராய்**

- விற்பனை உதவியாளர் (Sales assistant ) - பெண்கள் Basic Salary - 19000/-
- Billing Cashier - பெண்கள் Basic Salary - 19000/-
- Shop Assistant - பெண்கள் Basic Salary - 19000/-
- Part time cashier - ஆண்கள் (5.30pm - 10.30pm)

தகைமை : G.C.E A/L , Computer English knowledge
வயது எல்லை : 22 - 30
சுயவிபரக்கோவைகளை 0773504700/ 0773344700 whatsapp இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும். தொலைபேசி அழைப்புக்களை மேற்கொள்ள வேண்டாம்.

01. கடை துப்பரவு வேலை - பெண்கள்
02. Security - ஆண்கள் ( 9 am -9 pm )
077 350 4700 / 077 334 4700
(14588)

சம்பளம் நேரடியாக பேசித் தீர்மானிக்கப்படும், மேலதிக OT, EPF மற்றும் மதிய உணவு வசதிகள் உண்டு. உரும்பிராயில் இருந்து 10 Km பிரதேசத்திற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நிரந்தர தொழில் வாய்ப்பை தேடுபவர்கள் விண்ணப்பியுங்கள்.
உரும்பிராய் - 077 350 4700 / 077 334 4700

## காணி விற்பனைக்கு

காரைநகர் - வலந்தலைச் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் 6 பரப்பு காணி விற்பனைக்குண்டு.3 பரப் பாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்.
தொடர்பு
(14648)
**077 843 5224**
**077 504 5101**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1980 ஆம் ஆண்டு சதய நட்சத்திரத்தில் பிறந்த சகல வசதிகளுடைய Accounts Assistant ஆக பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(14630)
**077 367 1062**

## யாழிலிருந்து...

**Zoom Online Class**

**வரலாறு**
**A/L, O/L (தரம் 10,11)**

**SB.Sanu** (பிரபல பாடசாலை ஆசிரியர்)
பிரிவு -02
ஆரம்பம் : 19.02.2023 (ஞாயிறு 7.30 pm)
நாட்டின் எப்பகுதியில் இருந்தும் தொடர்புகொள்ளலாம்.
தொடர்புக்கு :- 077 834 3666, 077 214 0675 (Whatsapp)
(14518)

## ஆசிரியர் தேவை


விஞ்ஞானம் (தரம் 6 - 11 வரை)
கணிதம் (தரம் 6 - 11 வரை)
ஆரம்ப பிரிவு (தரம் 1 - 5 வரை)
(தெல்லிப்பளை வைத்தியசாலைக்கு அருகில் உள்ள தனியார் கல்வி நிலையம்)
(14618)
**077 448 8222**

## Micom




Yoganantham At mahajana College

Yoganantham with Proffesor At the University





Law of contract,Company Law, Commercial Law,Cambridge english
**(Mahajana College Last time 2 students got A)**
IELTS கற்பிக்கப்படும் Lecturer details



Recently 3 Students Have Got Throught in IELTS in Thellippalai international College of Law, Business& Computer Studies LLB (Col Uni), Dip in Journalisam, Lecturer in Laws, ICFAI University (Hyderabad) University of Ballarat (Australia)

• I Thank to all Members who have been working at Micom

**Mohanarajah Yoganantham (M.Raja Yoganantham) Proprietor**

who issued morethan 20,000 certificates in all Subjects Sofar

**Colombo Branch, Veeramanikathevanthurai, Myliddy K.K.S,Jaffna. Vaverset place,moor Road.**
(14637)

**Hotline: 077 395 0215**

## 31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம்
18 . 12 . 1975



மறைவு
20 . 01 . 2023

### அமரர் இராசநாயகம் வேல்வரதன்

எம் அன்பு உறவே அப்பா!
எங்கு தேடுவோம் உமை அப்பா!
கண்ணைக் காக்கும் இமை போல
எம்மைக் காத்த எம் அன்புத் தெய்வமே!
உமை இவ்வுலகில் நாமிழந்து மாதம் ஒன்று சென்றதுவோ?
வையத்தை விட்டு நீர் நீங்கிப் போனாலும்
நீங்காமல் உம் நினைவு எம்மோடு நிறைந்திருக்கும் அப்பா!
தேடிக் களைத்து விட்டோம் உங்களை
ஏங்கும் முன் தாங்கி நின்றீர்கள் கேட்கும் முன் கொடுத்தீர்கள்
வாழ்வின் வழியைக் காட்டினீர்கள்
எல்லாவற்றின் மதிப்பையும் அன்பால் சொன்னீர்கள்
துக்கமோ, சுகமோ உங்கள் அரவணைப்புக்காக ஏங்குகின்றோம் அப்பா!
ஆனாலும் என்றென்றும் உங்கள் நினைவலைகள் அழியாது
எங்களுடனே வாழும் அப்பா!!

அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தகவல் : குடும்பத்தினர்
வெள்ளைப்புற்றடி, இன்பர்சிட்டி, பருத்தித்துறை.
நந்தன் : +94 77 538 5735
(C-6000)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.